
# சிரித்திரன்

"ரேப்" பதிகம்




எழுத்தாளர்களே!


ஆண்டுமலர் தயாராகின்றது. உங்கள் ஆக்கங்களை அனுப்பிவையுங்கள்

சதம். 75
AUGUST 1976

அடுத்த இதழில் சி. சாத்தனுர் எழுதிய "இலக்கியச்சாரல்" ஆரம்பமாகும்.
மாத்தளை சோமுவின் சிறுகதை வெளியாகும்

SIRITHITAN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உங்கள் தங்க வைர நகைகளுக்கு

இன்றே விஜயம் செய்யுங்கள்.

# லலிதா ஜுவலறி

உரிமையாளர்:

செல்லையா இந்திரசித்து

இல. 133, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்திரன்


செய்தொழில் தெய்வம்
சிரிப்பே சீவியம் —

ஆக. 1976

நகை: 13

சுவை: 10

## வணங்காமுடி வணங்குகிறது!






வாசகப் பெரியார்களே!

எனது நண்பன் ஒய்யப் பங்கங்காணியை பதுளையில் பார்த்திட்டு யாழ்ப்பாணம் வரும்பொழுது எனதுகுடை காணமல் போய்விட்டது. எனக்கு நோய் நொடி வராது வைத்திப நண்பன்போல் துணைபுரிந்த குடை அருகாமையில்இல்லாததால் அமைதியிழந்தவனாயிருக்கின்றேன் சிரித்திரன் பக்கமும் இம்முறை எழுத முடியாமல்போய் விட்டது. குடை தேடித்தருவோருக்கு அல்லது தேடுவதற்கு துப்புத் துலக்கும் அன்பர்களுக்கு நான் கடமைப் பட்டவனாக இருப்பேன்.

மெயில்வாகனத்தார்
C/o சிரித்திரன் காரியாலயம்
122, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## அருட்புனலே





**பரிசுக் கேள்வி**

க. திரவியம், யாழ்ப்பாணம்.

கே. டெலிவிஷன் யாழ்ப்பாணம் வந்தால்?

ப. வேலிப் பொட்டுக்குள்ளால் அடுத்தவீட்டுக் காட்சி பார்ப்பதை நிற்பாட்டுவார்கள்!

எஸ். கிருபாகரன் நீர்கொழும்பு

கே. மது சிந்து பவனின் எதிர்காலத்திற்கும் வியர்வை சிந்துபவனின் எதிர்காலத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன?

ப. மது சிந்துபவனின் எதிர் காலம் உதிர்காலம், வியர்வை சிந்துபவனின் எதிர்காலம் கதிர் காலம்.

☐

செ. சிவலோகநாதன், கொழும்பு

கே. எவன் அவலட்சணமானவன்?

ப. இந்திரன்கூட ஏழையானால் அவனை உலகம் அவலட்சண அவதாரமென மதிக்கும்!

☐

எஸ். எம். அப்துல்காதர், மூதூர்

கே. மனிதன் ஏன் படிக்க வேண்டும்?

ப. சந்திரனை, சுக்கிரனை, செவ்வாயை அறிவதற்கல்ல. தன்னை அறிவதற்கு!

செல்வி. க. செந்தி, புலோலி.

கே. உலகில் எதற்குப் பஞ்சம், எதற்குச் செழிப்பு?

ப. பஞ்சசீலத்திற்குப் பஞ்சம், பஞ்சமாபாதகத்திற்குச் செழிப்பு!

☐

சி. அன்ரன் அச்சுவேலி.

கே. மகுடியாரே! நீர் யார்?

ப. அதை அறிவதற்காகத்தான் கேள்விக்கணைகளின் மத்தியில் வாழ்கின்றேன்!

☐

ஏ. முத்து, நல்லூர்.

கே. வையகத்தில் நீர் மதிக்கும் மாமனிதர்கள் யார்?

ப. எனக்கு உயிர் தந்த பெற்றோரும், என் உயிரை வாழவைக்கும் உழவர்களும்!

☐

செல்வி. ஸனீமா ஹஸீம், நாவலப்பிட்டி.

கே. மகுடியாரே... நீர் சுதந்திர புருஷன் தானே?

ப. இல்லை... கைதி. நான் சாரியைத் திருமணம் செய்து சுதந்திரமிழந்த பிரமச்சாரி!

த. சிவபாலன், நுவரெலியா.

கே. 'லவ்' என்பது என்ன? 'செக்ஸ்' என்பது என்ன?

ப. குயிலின் இசையை விரும்புவது 'லவ்' குயிலின் இறைச்சியை விரும்புவது 'செக்ஸ்'

☐

சி. முருகன், திஸமாறகம.

கே. தமிழ்ச்சினிமாவினதும் சிங்கள சினிமாவினதும் இன்றைய நிலை என்ன?

ப. பிந்தின கொம்பாகிய சிங்கள சினிமா முந்திய செவியாகிய தமிழ்ச் சினிமாவை மூடி விட்டது!

☐

த. மயில்வாகனம், திருகோணமலை.

கே. உமக்குப் பிடிக்காதது எது?

ப. படிக்காதவனல்ல, படித்துவிட்டு படிப்பின்படி ஒழுகாதவன்!

☐

ச. பாலகிருஷ்ணன், மஸ்கெலியா

கே. நீ கடவுளாக இருந்தால்?

**கணக்கு விடுகிறோம்,**

நானும் கணக்கு விடுகிறோம் என்ற கணக்கைச் செய்வதற்கு தலையைச் சொறிந்து பார்த்தேன், தடவிப் பார்த்தேன், தலைகிழாய் நின்று பார்த்தேன். ஒன்றுமே முடியவில்லை. கணிதம் எனக்கு சூனியமான வித்தை. நேயர்களே நீங்களே விடையை அனுப்புங்கள். அடுத்த இதழில் பிரசுரிக்கின்றோம்.

நன்றி, மகுடியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப. அடிமைகளையும் அனுதை களையும் அள்ளி அணைத்து உலகை ஆளவைப்பேன்!

□

அ. அருளானந்தம், கிளிநொச்சி

கே. இன்றைய காதல் பற்றி உமது கருதது?

ப. அது அன்றையது. அபூ ரத்துவமானது அல்ல!

□

க. ஐ. யோகராஜா, கல்முனை.

கே. நீர் மனைவியுடன் சண்டை போடாத நாளுண்டா?

ப. நிமிடமேயில்லை!

□

த. பரமசாமி, பண்டாரவளை.

கே. எவன் போலி?

ப. அஹிம்சா மூர்த்தியின் படத்தையும் அடிமையையும் வீட்டில் வைத்திருப்பவன்!

□

செல்வி. சுகிர்தராணி மாணிக்கவாசகர், கிளிநொச்சி.

கே. யாழ்ப்பாண மக்கள் இன்று யாழ்ப்பாணத்தில் இல்லாது நாலு திசையிலும் சிதறியிருப்பதன் மர்மமென்ன?

ப. நதியில்லாததால் நாதியற்றவராய் நாலு திசையும் நாலு சம்பாதிக்கப்போயிருக்கிறார்கள்!

□

ச. திருச்சந்திரன், கிளிநொச்சி.

கே. ஒருவன் காதலில் இருக்கும் காலத்தில் அவனுக்கு காதல் சினிமாப் பாடல் எல்லாம் இனிமைதானே?

ப. அதிலும் அவனைத் தேடி வரும் காதலியின் அடி ஓசை அதி மதுரமானது!

வி. கோபால், அனுராதபுரம்.

கே. உலகும் சுழலுகிறதா?

ப. விஞ்ஞானிக்கும் வெறிகாரனுக்கும் சுழலுகிறது... மூடனுக்கு நிலையாய் நிற்கிறது!

□

மு. ஸ்ரீதரன், சீனன்குடா.

கே. நாம் புஸ்தகங்கள் படிப்பது எதற்கு?

ப. அகத்தை அறிவதற்கு!

□

எம். ஏ. அப்துல்காதர், காத்தான்குடி.

கே. உமது பதில்கள் தேனுக இனிக்கின்றதே... உமது பேனுவைத் தேனில் தொட்டா எழுதுகின்றீர்?

ப. ஏதோ காமா சோமா என்று எழுதுகிறேன்... சோபிக்கிறது... அவ்வளவுதான்!

□

த. சிவபாலன், யாழ்ப்பாணம்.

கே. மகுடியாரே! உம்மை நெக்குருகச்செய்த பாடல் எது?

ப. ''ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்று'' என்ற பட்டினத்தார் பாடல்... அதைச் சௌந்தராஜன் பாடும் பொழுது அழுதேவிடுகிறேன்!

□

சி. தாமோதரம்பிள்ளை, உடப்பு

கே. மகுடியாரே! நீர் கேட்ட முதல் இசை எது?

ப. நான் சிசுவாக தாயின்கர்ப்பப்பையில் இருக்கும்போதுகேட்ட தாயின் இதயத் துடிப்பு!

ஏ. எம். அப்துல்காதர், மன்னார்.

கே. மகுடியாரே! நீர் நாடுவதென்ன?

ப. நாணயத்தையல்ல... நாணயமான இதயங்களை!

□

எஸ். வாமதேவா, அக்கரைப்பற்று.

கே. மகுடியாரே! கல்வி எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும்

ப. சொன்னதைச் சொல்லும் கிளியாகவோ செய்ததைச் செய்யும் குரங்காகவோ இருக்கக் கற்றுக்கொடுக்காமல் புதுமையைச் சிருஷ்டிக்கும் கல்வியாக இருக்கவேண்டும்!

□

தி. திவாகரன், மஸ்கெலியா.

கே. கற்பு களங்கமில்லாததாக இருக்கவேண்டும்... அதில் உமக்கு நம்பிக்கையா?

ப. மருந்து கலப்படமாக இருந்தால் உயிருக்கு ஆபத்தல்லவா!

□

சி. துரைசிங்கம் பரந்தன்.

கே. காலம் என்ன செய்து கொண்டிருக்கின்றது?

ப. மாநிலத்தின் சரித்திரத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது. மனிதனின் சரித்திரத்தை உருக்குலைத்துக் கொண்டிருக்கின்றது.

□

க. தங்கராசா, வவுனியா.

கே. கோயில் திருவிழாக்களில் பெண்கள் மத்தியில் நெரிபட விரும்புபவனைப்பற்றி உமது கருத்து?

ப. மதம் பிடித்தவன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்டர் மாளியர் குடும்பம் யாழ் விஜயம்.



பிரென்சு நாட்டைச் சேர்ந்த டாக்டர் மாளியரும் திருமதி' தான்—ரூ மாளியரும் இரு வாரங்களாக யாழ்ப்பாண மக்களின் கலாசாரத்தையும் சமய வாழ்க்கையையும் நேரடியாக ஆராய்ந்துகொண்டிருக்கின்றனர்.

இத்தம்பதியினர் இருவரும் தத்தமக்கே உரிய துறைகளில் பிரபல்யம் பெற்றவர்கள். டாக்டர் மாளியர் சோபோன் பல்கலைக்கழகத்தில் கிழைத்தேசக் கலைகளில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். பாங்கொக் பல்கலைக் கழகத்தில் நாலாண்டுகள் பேராசிரியராக இருந்தவர். தற்போது பிராஞ்சிய கல்விச் சேவையில் கடமையாற்றுகின்றார். தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கெல்லாம் சென்று சமூகவியல் துறையில் ஆராய்ச்சிகள் நடாத்தி, இப்பிராந்திய நாகரிகங்களில், விசேடமாகச் சமயங்களில் நிபுணரென்று கணிக்கப்பட்டவர். சமயங்களின் வரலாறு பற்றிய பிரென்சு சங்கத்தின் உபதலைவராகவும் உள்ளார்.

திருமதி. தான்—ரூ அம்மையார் ஜெனீவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைக் காரியாலயத்தில் பணிபுரிபவர். கணவனைப்போலப் பன்மொழிப் புலவர், பிரென்சு ஆங்கில மொழிகளிலுள்ள அவரின் புலமை காரணமாக, கொழும்பில் நடக்கவுள்ள கூட்டுச்சேரா நாடுகளின் மகாநாட்டிற்கு மொழிபெயர்ப்பாளராகத் தேர்ந்தனுப்பப்பட்டுள்ளார். சங்கீதம், நடனம் தட்டெழுத்து, நீச்சல் ஆதியாம் கலைகளிலும் தேர்ச்சி பெற்றவர். கல்வித்துறையில் கலாநிதிப் பட்டம் பெறுவதற்கான ஆராய்ச்சியிலும் ஈடுபட்டுள்ளார்,

யாழ்ப்பாண மக்கள் வாழும் விசேட சூழ்நிலையில் அவர்களின் மத அனுட்டானத்தில் காணும் தனித்துவ அம்சங்களை அறியும் முக்கிய நோக்குடன், இத்தம்பதியினர் பேட்டிகள், பிரசுரங்கள் மூலம் தகவல்கள் தேடுகின்றனர். இதுவரை அத்தியட்சகர்கள் சபாபதி குலேந்திரன். தியோகுப்பிள்ளை, கலாநிதிகள், தனிநாயக அடிகள், K. கைலாசபதி, K. கைலாசநாதக் குருக்கள், W. L. ஜெயசிங்கம், S. சண்முகதாஸ், சுசயித கமலத், M. U. D. சில்வா. திருமதி. இரத்தினு நவரத்தினம, சன்மார்க்க இதழாசிரியர் தனபாலசிங்கம், திரு. K. நேசையா ஆகியோருடனும் வேறு பல அறிஞர்களுடனும் கலந்துரையாடியுள்ளனர். புத்த' சைவ, வைஷ்ணவ முதலான பல கோவில்களிலும் வீடுகளிலும் நடைபெறும் சமயச் சடங்குகள், கல்வி நிலையங்கள், கலைக்காட்சிகள், உற்பத்தி நிறுவனங்கள் ஆகியவையும் இவர்களின் நுண் ஆய்வுக்கு ஆளாகியுள்ளன.

அன்பும், பண்பும். எளிமையும். அறிவார்வமும் நிறைந்த இத்தம்பதியினர் தமது இரு குழந்தைகளுடன் கரவெட்டி, கலைச்சோலையில் வசிக்கும் பொறியியல் மாணவன் மு. சிறீஜயந்தாவின் இல்லத்தில் தங்கியிருந்து தமது ஆராய்ச்சியை மேற்கொள்வதோடு' தாம் பெற்ற அறிவைப் பிறருடன் பகிரும் பெருங்குணம் படைத்தவர்களாகக் காட்சி தருகின்றனர். இரு வாரங்களுக்குள் 3 சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளனர். யாழ்ப்பாணத் தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தில் ''பண்டைய மத்தியகாலத் தென்கிழக்கு ஆசியாவில் இலங்கையும் இந்தியாவும் ஏற்படுத்திய தாக்கங்கள்'' பற்றியும், தென் ஆசிய ஆராய்ச்சிக் கழகத்தில் ''தென்கிழக்கு ஆசியாவின் சமயத் தலைமைப் பீடத்தில் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் மாற்றங்கள்'' பற்றியும், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் ''பிரான்சிய நாட்டின் கல்வித்துறை'' பற்றியும் கருத்துக்கள் வழங்கியுள்ளனர்;

சிரித்திரன் காரியாலயத்திற்கு இவர்கள் வந்தபொழுது கொடுத்த பேட்டியில், தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சமயங்களை நன்கு விளங்குவதற்கு, இலங்கையின் புத்தமதம், இந்துமதம் ஆகியவைபற்றிய அறிவு அவசியமென்றும் கூறினர்கள்.

டாக்டர் மாளியர் தம்பதிகள் நம் நாடு வந்து நமது மதம், கலை, கலாச்சாரத்தில் பயபக்தியுடன் ஆய்வு நடாத்துவதற்கு சிரித்திரன் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறுன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன்: அப்பா... இந்த ஆவணியில் என்னால் கல்யாணம் செய்ய முடியாது... அடுத்த ஆவணிக்கு கல்யாணத்தை வையுங்க.

தந்தை; கல்யாணத்திற்கு எல்லா ஏற்பாடும் செய்தாச்சு... உனக்கென்ன தலை பழுதாப்போச்சுதா?

மகன்; ஆமப்பா... தலை பழுதாப்போச்சு... நான் ஏதோ யோசனையிலிருக்க பார்பர் பையன் என் ஹிப்பித் தலையை மொட்டையடித்திட்டான்.

## கலாச்சரம்.

● வெகு விரைவில் ஈழத்தில் படமாக்கப்படவிருக்கும் ''காத்திருப்பேன் உனக்காக'' என்ற திரைப்படத்திற்கான கதை வசனத்தை எழுதியிருப்பவர் யார் தெரியுமா? ''முனை வெடித்த மொட்டு'' என்ற நாவலை எழுதி இலங்கைச் சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றுக்கொண்ட நவாலியூர், நா. செல்லத்துரை அவர்கள் தான்.

● பேராதனை வளாக 'காந்தர்வ கான சபா'வின் இயக்குனரான கலாநிதி மாரசிங்க அவர்கள் பிரபல சிதார் இசைமேதை வியாயத்கானிடம் சிதார் இசை பயின்றவராவர்.

● ஜெயகாந்தனின் முதலாவது சிறுகதைத் தொகுதிக்கு முன்னுரை எழுதியவர், தமிழகத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களுள் ஒருவரான தி. ஜானகிராமன் அவர்களாவார். அதன் பின்னர் வெளியாகும் ஜெயகாந்தனின் எந்தப்படைப்புக்கும் ஜெயகாந்தனே முன்னுரையை எழுதிவருகிறார்.

● ''அரிச்சந்திரா'' நாடகம் மூலம் ஈழத்து நாடக வரலாற்றிலேயே ஒரு தனியிடத்தைப் பெற்றுவிட்ட நடிகமணி V. V. வைரமுத்து அவர்கள் ஆரம்ப காலத்தில் அந்நாடகத்தில் 'முன் சந்திரமதி'யாக நடித்து வந்தாராம். அந்த நாடகத்தில் 'பின் சந்திரமதி'யாக நடித்து வந்தவரும், அந் நாடகத்தின் இயக்குனருமான ச. தம்பிஐயா என்பவர் நடிகமணியின் குரலிலுள்ள கம்பீரத்தை மெச்சி, பின்னர் அவரை அரிச்சந்திரனாக நடிக்க வைத்தாராம்.

● சாஸ்திரீய சங்கீத வளர்ச்சிக்கென பேராதனை வளாகத்தில் சென்ற ஆண்டிலேதான் முதன் முதலாக ஒரு சங்கம் உருவாகியது. 'சங்கீத நாட்டிய சங்கம்' என்ற இச் சங்கத்தை உருவாக்குவதில் தத்துவ விரிவுரையாளர்களான கலாநிதி V. இராமகிருஷ்ணன், திரு. காசிநாதன் ஆகிய இருவருமே பெரும்பங்கு வகித்தவர்களாவர்.

— குறிஞ்சி வாழ்வோன் —

# இருநூறு ஆண்டு

## இலங்கை அமெரிக்க உறவுகள்!

★ அமெரிக்க மக்கள் தங்கள் சுதந்திர அரசியல் திட்டத்தை அங்கீகாரம் செய்த 1789-ம் வருடம் திமிங்கிலம் பிடிக்கும் மாலுமிகள் இலங்கைக்கு விஜயம் செய்தனர்.

★ அடுத்து இலங்கை விஜயம் செய்த அமெரிக்கர்கள் வணிக நோக்கம் கொண்டவர்களாக இருக்கவில்லை. அவர்கள் அமெரிக்க திருச்சபையைச் சேர்ந்த கிறிஸ்தவ சமயத் தொண்டர்களாவர். சமயப் பணியாளர்கள் 1816-ல் முதன்முதலாக தெல்லிப்பழையில் பள்ளிக்கூடம் ஆரம்பித்தனர். 1823-ல் வட்டுக்கோட்டை கல்லூரியை ஆரம்பித்தனர். இக்கல்லூரி அன்று அமெரிக்கா, இங்கிலாந்து பல்கலைக்கழகங்களுக்கு சமமான அறிவகமாக விளங்கியதாகக் கூறப்பட்டது. 1824-ல் உடுவில் மகளிர் பாடசாலை தங்கும் விடுதிகளுடன் ஆரம்பிக்கப்பட்டது. ஆசியாவிலேயே முதன்முதல் விடுதியுடன் ஆரம்பிக்கப்பட்ட பெண்கள் உயர் கல்வி நிலையம் இதுவே.

★ அமெரிக்க திருச்சபைக்குச் சொந்தமான 121 கல்வி நிலையங்கள் 1848ம் வருடம் செயற்பட்டுக் கொண்டிருந்தது.

★ யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக 1820-ல் அச்சகம் ஆரம்பித்த பெருமை அமெரிக்கத் திருச்சபைக்கே சாரும். இலங்கையின் இரண்டாவது செய்தித்தாளை ''உதயதாரகை'' என்னும் பெயரில் 1841-ல் இவர்களே வெளியிட்டனர். இப்பத்திரிகை இன்னும் வெளிவந்துகொண்டிருக்கிறது.

★ 1862-ல் அதி வணக்கத்திற்குரிய பிரன் வின்ஸ்லோ முதன்முதலாக விரிவான தமிழ் — ஆங்கில அகராதியை வெளியிட்டார். அமெரிக்கத் திருச்சபை மருத்துவப் பகுதி 4000 பக்கங்கள் கொண்ட மருத்துவ நூலை வெளியிட்டது:

★ அமெரிக்க உள்நாட்டுப் போர் ஆரம்பித்த 1865-ம் வருடத்திற்கு முன் அமெரிக்கப் பொய்கையில் உறைந்த பனிக்கட்டிகள் (ஐஸ்கட்டிகள்) குடிவகைகளைக் குளிர்படுத்த கொழும்பில் உபயோகிக்கப்பட்டது. இலங்கைக் காரீயம் அமெரிக்க உள்நாட்டுப்போரில் மட்டுமல்ல, லட்சக் கணக்கான அமெரிக்கப் பள்ளிப் பிள்ளைகளின் பென்சில்களின் மூலப்பொருளாக உபயோகிக்கப்பட்டது,

— தீர்த்தமரியா —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் பல்கலைக்கழக புரபசரொருவர் சொன்னது இது!

நான் சமீபத்தில் அவுஸ்திரேலியாவிலிருந்து வந்த ஒரு வயதான மனிதரைச் சந்தித்தேன். அவர் தன்னைப்பற்றி அளவுக்கதிகமாகப் புழுகினார். நானும் விட்டுவிட்டேன். ஏனென்றால் வயதான மனிதர்களுக்குப் புழுகுவது ஒரு பழக்கம். அவர் சொன்னார்.

''எனக்கு மூன்று பிள்ளைகள். மூன்றுபேரும் நல்லாயிருக்கினம்''

''ஓ! அப்படியா! நல்லது என்ன செய்யினம்?''

''ஒரு மகன் டாக்டர், கனடாவில் இருக்கிறான். வீடு, கார் எல்லாம் இருக்குது. இரண்டாம் மகன் என்ஜினியர். இப்ப அவன் சிங்கப்பூரில் இருக்கிறான். அவனுக்கும் வீடு, கார் எல்லாம் சொந்தமாக இருக்கிறது.''

''அப்படியா சந்தோசம். மூன்றாவது மகன் என்ன செய்கிறார்?''

''அவர்தான் சரிவரவில்லை. மற்றவை இரண்டுபேரும் நல்லா வந்திட்டினம்' அவனால நல்லா வர முடியவில்லை. நானும் சொல்லிச் சொல்லிக் களைச்சுப் போனேன்.''

''ஏன் அவர் என்ன செய்கிறார்?'' (அவர் சொன்ன முறையிலிருந்து எங்கோ சிறையிலே சிறையிலே இருக்கிறாரோ என்றுதான் நான் நினைத்தேன்.)

ஒண்டுமில்லை அவன் ஒரு யூனிவசிட்டியில புரபசராக இருக்கிறான்'' என்றார், என்று சொன்னதுதான் தாமதம் எங்கள் விரிவுரை மண்டபம் ஒருமுறை அதிர்ந்தது.

— சாவகச்சேரி ரவி —




V. பத்மினி,
1039, திருநகர், கிளிநொச்சி.

D. L. A. ஹசன்,
ஜெஸீருஸ், S. M. ரோட்,
மருதமுனை-1, கல்முனை.

எஸ். சேதுராமு,
பிரதான வீதி.
சிலாபம் — உடப்பு.

வீரசொக்கன்,
5-ம் வட்டாரம்,
சிலாபம் — உடப்பு.

செ. சாமிநாதன்,
7-ம் வட்டாரம்,
நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை.

ந. சூரியநாராயணன் (16)
211, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

மோஹன் கண்ணு,
'யோகீஸ்'
கடற்கரை வீதி, களுதாவளை-4,
களுவாஞ்சிக்குடி.

மகேந்திர ஜெயின்,
வயது 16
C/o மோகேந்திராஸ்,
டிமாபூர் 797112
நாகலாந்து.

மீரா,
பொலிஸ் 'இன்ஸ்பெக்டர்
குவாட்டர்ஸ், 8, சாந்திநகர்,
ஹைதராபாத்.

## கணக்கு விடுகிறோம்

தெருவிலே முட்டை விற்றுக்கொண்டு போனார் முட்டை வியாபாரி ஒருவர். அவ்வழியால் சைக்கிள் பழகிவந்தவர் முட்டை வியாபாரிமேல் மோதி விழுத்திவிட்டுத் தானும் மறுபக்கம் சரிந்துவிட்டார். முட்டைப் பெட்டியிலிருந்த முட்டை யாவும் ஒன்றுவிடாது உடைந்துவிட்டது. முட்டை வியாபாரி சைக்கிளைப் பிடித்துக்கொண்டான். சைக்கிள் பழகியவரோ முட்டைத்தொகையைச் சொன்னால் அவற்றைத் தன்னால் வாங்கித்தர முடியுமென்றார். முட்டை வியாபாரியோ படிப்பறிவில்லாதவன், எண்ணத் தெரியாதவன். அவன் பின்வருமாறுசொன்னான்: நான் கொண்டு வந்த முட்டைகளை இரண்டிரண்டாகக்கூறுவைத்தபோது ஒன்றும் 3 ஆக வைத்தபோது 2 ம், 4 ஆக வைத்தபோது 3 ம், 5 ஆக வைத்தபோது 4 ம், 6 ஆக வைத்தபோது 5 ம், 7, 8, 9, 10 ஆக வைக்கும்போது முறையே 6, 7, 8, 9 ம் மிஞ்சின. ஆனால் 11 ஆக வைத்தபோது கூறு மிச்சமில்லாமல் சரியாக இருந்தது. சைக்கிள் விட்டவருக்கோ தர்மசங்கடம். வாடைச்சயிக்கிள் கொடுக்கவேண்டும். நீங்களாவது ஆகக் குறைந்தது எத்தனை முட்டையெனத் தெரிவித்துப் பாவம், சயிக்கிள்காரனை விடுவியுங்கள்.

விடை மகுடியார் பக்கத்தில்.


# சுஜி ஒப்ரிக்கல்

**பல் கட்டுபவர்கள், கண் பரிசோதகர்கள்**


## சுஜி ஒப்ரிக்கல்

46, மெயின் வீதி, (உஷா கொம்பனி முன்பாக) யாழ்ப்பாணம்.

# குறுக்கெழுத்துப் போட்டி
## இலக்கம்: 2

பெயர்:..........................................................................................................

விலாசம்:......................................................................................................




இடமிருந்து வலம்:

1. இந்தியாவின் ஒரு தலைசிறந்த தலைவர்.
13. பெற்றோர் தங்கள் மகளுக்கு நல்ல இது உள்ள வரனைத் தேடுவார்கள்.
26. இது ஒரு மரம்.
28. இவள் ஒரு பெண்.
34. தங்கள் இதைச் சிலர் கவனமாக வளர்ப்பார்கள்.
37. தங்கள் காலபலனை இது பார்த்துத் தெரிந்துகொள்வார்கள்.

மேலிருந்து கீழ்:

1. இது 12 ராசிகளில் ஒன்று.
7. 27 நட்சத்திரங்களில் ஒன்று.
8. இது ஒரு கண்டம். 13. இது ஒரு மிருகம்.
23. இது வாழ்க்கையில் மாறி மாறி வரும்.
26. இது எல்லோருக்கும் உண்டு.
31. இது ஒரு பறவை.

குறுக்கெழுத்துப் போட்டியில் முதலாம் பரிசு பெறும் நேயருக்கு ஈழத்து எழுத்தாளர்களின் புத்தகங்களும், இரண்டாம் பரிசு பெறும் நேயருக்கு ஒரு வருட சிரித்திரனும், மூன்றும் பரிசு பெறும் நேயருக்கு 6 மாதச் சிரித்திரனும் அனுப்பிவைக்கப்படும்.

போட்டியில் பங்குபற்றுவோர் இக்கூப்பனை நிரப்பி 20-8-76-க்கு முன் அனுப்பி வைக்கவும். ஒருவர் எத்தனை போட்டிக் கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 1,

**சரியான விடைகள்:**

இடமிருந்து வலம்:-

1. நகைச்சுவை 6. இராமன்
14. பசி 23. சடை
25. சிலைக்கடை

மேலிருந்து கீழ்:-

1. நண்பன் 4. சுரண்டி
6. இரவு 8. மனைவி
23. சட்டி 25. சிட்டு
28. கடன்

குறுக்கெழுத்துப் போட்டி 1-ல் பங்குபற்றிய பல்லாயிரக் கணக்கானோர்க்கு எமது நன்றி. சரியான விடைகளை எழுதிய ஆயிரக் கணக்கானோரில் அதிர்ஷ்டசாலிகளான நேயர்கள் விபரம் வருமாறு:-

1-ம் பரிசு:

க. விமலேஸ்வரி,
C/o சி. இளங்கோவன்
உடுப்பாற்றுக்கண்டல்,
கண்டாவளை.

2-ம் பரிசு:

இ. சிறீபாலன்,
ஒட்டோ ரேடேர்ஸ்,
163, கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

3-ம் பரிசு:

திருமதி. அம்பிகா
சிதம்பரப்பிள்ளை
உடுத்துறை தெற்கு,
செம்பியன்பற்று.

வாழ்த்துக்கள் நேயர்களே! உங்களுக்கான பரிசு காலக்கிரமத்தில் உங்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

இதை வெட்டி ஒட்டுக.

**குறுக்கெழுத்துப் போட்டி-2**
''சிரித்திரன்''
122, நாவலர் வீதி.
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாவதி நகை மாளிகை

Prop: Mrs. P. Ratnasingam & Sons

239, பிரதான வீதி, பருத்தித்துறை.

உங்களது நயம் நம்பிக்கை நாணயமுள்ள

**நவீன தங்க வைர நகைகளுக்கு**

சிறந்த இடம்.

சிறந்த வேலைப்பாட்டுடன்

ஓடர் நகைகள் குறித்த காலத்தில்

செய்து கொடுக்கப்படும்.

**KALAWATHY JEWELHOUSE**

239, MAIN STREET, POINT PEDRO.

Dial: 567



# ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்



உங்கள் எழில் மேனியை

மேலும் எழில் ஊட்ட

எங்கள்

பட்டுச் சாரிகளை

அணியுங்கள்,

**ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**

18-A, மக்கள் நவீன சந்தை,

மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பாதைகள் உருவாகின்றன!

நீர்ப்பாசனத் திணைக்களத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் நடாத்திய சிறுகதைப் போட்டியில் பாராட்டுப் பெற்ற சிறுகதை.

பங்குனி மாதத்தின் அனல் பறக்கும் வெயில். குடை பிடித்த கை வியர்வையில் கசகசக்க குடைக்கும் செருப்பிற்கும் தாக்குப் பிடிக்க முடியாது வாட்டும் வெயிலுக்குத் தப்பி வீட்டுக்குச் சென்றுவிடவேண்டும் என்ற தவிப்பில் விரைந்து நடைபோடுகிறார் வேலுப்பிள்ளை.

''எவ்வளவு நல்ல மனிசர். எந்தளவு நாகரீகமான மனிசருக்கு நடுவிலை என்னை அலட்சியம் பண்ணாமல் வரவேற்று உபசரிச்சு, நிண்டு சாப்பிட்டிட்டுப் போக வேணுமெண்டு நாண்டுகொண்டு நிண்டுதுகள். ம்... இந்த நாளையிலை இப்பிடியும் சில மனிசர்...''

அவர் மனம் கல்யாண வீட்டில் நடந்தவைகளைப் பற்றி அசை போடுகிறது. உறவு என்று இல்லாமல் நட்பு ரீதியில் நெருங்கி விட்ட அந்த மனிதர்களை நினைக்கையில் வேறு சில மனிதர்களின் நினைவு வந்து மனத்தைச் சுளிக்க வைக்கிறது.

வீட்டுப்படி ஏறும்போது நினைவில் வந்து மனத்தைச்சுளிக்க வைத்த மனிதர்களின் வீட்டில் அவர்களின் நாவில் — அறுசுவை உணவு உண்டுவிட்டு ஆறியிருக்கும் அந்த வேளையில், ஏழாவது சுவையாக தானும் தன் குடும்பமும்தான் சுவைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதை உணராத அவர், தனது வீட்டில் நுழைந்து உடைகளை மாற்றி விட்டு வாங்கில் அமர்கிறார்.

கல்யாண வீட்டுச் சேதிகளை அறியும் ஆவலில் வந்துநிற்கும் குடும்பத்தவருக்கு உற்சாகமாக சேதி சொல்ல ஆரம்பிக்கிறார் அவர்.

''நான் சொன்னனப்பா கேட்டியே. போன உடனை சுப்பையரும் பிறகு மனிசியும் நீ ஏன் வரேல்லை எண்டதைத்தான் முதல்லை கேட்டினம். அவள் பொம்பிளை, தேவியை ஏன் கூட்டியரேல்லை எண்டு கேக்கிறாள்''

''ம்... அதுகள் பெரிய இடத்து ஆக்கள். எங்கையும் போவினம் வருவினம். எங்கடை முறைதலையுளேம் மனிசற்றை குணங்களையும் அதுகள் எங்கை அறியப்போகுதுகள்.''

— சௌமினி —

அவர் மனைவி அங்கலாய்த்த படி எதையோ நினைத்துப் பெருமூச்சு விடுகிறாள்.

''இஞ்சை உந்தக் கதையை விடு. மற்றவையைப் பற்றி நீ கவலைப்படவேண்டாம். அவை எங்களுக்குச் சோறு போடேல்லை.

''நான் எதுக்கும் பயப்பிடேல்லை. ஆனால் எங்கடை பிள்ளைகளின் வாழ்வும் தாழ்வும் மற்றவேன்றை நாக்கிலைதான் இருக்கு எண்டதை நான் உங்களை விடக் கூடத் தெரிஞ்சு வைச்சிருக்கிறன்''

அவளது பேச்சும் தொனியும் அவருக்கு எதையோ ஆழமாக உணர்த்துவதுபோல் படவே, தமது விட்டேற்றியான சுபாவத்தை விட்டு மனைவியை 'என்ன விஷயம்' என்பதுபோல் நிமிர்ந்து பார்த்தார் வேலுப்பிள்ளை.

''நீங்கள் இப்ப உங்கடை சம்பந்திவீட்டை கல்யாணச் சாப்பாடு சாப்பிடப் போயிருக்கிறீர்கள் எண்டு இங்கை ஒரு நக்கல் கதை அடிபடுகுது தெரியுமே உங்களுக்கு''

அவர் அதிர்ந்தாற்போல் நிமிர்ந்து அவளைப் பார்த்தார்,

''ஒரு கதை முடிய ஒரு கதை ஆரம்பமாகியிருக்கு. உங்களுக்கு உங்களைத் தவிர வேறு நினைவே கிடையாது. ஊர் உலகத்தின் கண் எப்பவும் மற்றவையின்ரை பக்கம்தான் திரும்பின படி இருக்கு. அதிலும் வயது வந்த பிள்ளைகளை வைச்சிருக்கிற குடும்பங்களை அது கண் கொட்டாமல் பார்த்தபடி இருக்குது. அவையின்ரை ஒவ்வொரு சின்ன அசைவையும் நடவடிக்கைகளை

மனை: வட்டியும் கூடிக் கொண்டு போகுது. வயதும் கூடிக்கொண்டு போகுது... எப்படிக் கடனெல்லாம் கொடுத்து முடிக்கப் போறீங்கள்?

கணவன்: ! ! !

மாமி; ஏன் பிள்ளைகளும் கூடிக்கொண்டு போகுது,

— ஜோக்கிரட்டீஸ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் போக்குவரத்துகளையும் அவ தானிச்சு கதை கட்டிறதிலைதான் அதுவின்ரை பொழுது போகுது: இதொண்டையும் யோசியாமல் என்னை வா எண்டீங்கள். விட்டிருந்தா தேவியையும் கூட்டிப் போயிருப்பீங்கள்"

என்று படபடவென்று பொரிந்தாள் அவள்.

"இது என்ன அநியாயமாய் கிடக்கு. நன்மை செய்த மனிசருக்கு நன்றிக்கடன் தீர்க்காமல் நன்றிகெட்டதனமாய் நடந்து கொண்டால் தான் நல்ல பேர் வாங்கலாம்போலை கிடக்கு. இந்த மாதிரி கதை கட்ட எப்படித் தான் மனம் வருதோ? ஒரு டாக்குத்தர் பொடியனுக்கு பொம்பிளை குடுக்கிறதெண்டா எத்தனை லகரம் வேணும் எண்டதைப் பற்றி யோசியாமல் நாங்கள் இதுக்கு ஆசைப்படுறம் எண்டு கதை கட்டுறதே, இதுக்குத்தான் நான் அங்கை போய்வாறனெண்டால் பொடியனுக்கு கல்யாணம் நிச்சயமானது தெரிஞ்சாப்பிறகும் போய்வாறனே. ம்... வரவர எப்பிடிக் காலம் தள்ளுறதோ தெரியேல்லை"



கெட்டிக்காரப் பிள்ளைகள் தானே வகுப்பு முன்வரிசையில் இருப்பார்கள். நீ மக்கு ஏன் முன் வரிசையில் வந்து உட்கார்ந்திருக்கிறாய்?

மன்னிக்கவேணும் சேர்... தியேட்டர் நினைவில் முன்னுக்கு வந்து உட்கார்ந்து விட்டேன்,

— ஜோக்கிரட்டீஸ்

என்றவாறு சோர்ந்துபோய் வாங்கில்சரிந்தார் வேலுப்பிள்ளை. அறைக்குள் இவ்வளவையும் கேட்டுக்கொண்டிருந்த பானு வெளியே வந்தான்.


"அப்பா என்னுடைய காதிலும் சில கதையள் விழுந்திது. என்னை நேரில் கேட்டவையும் இருக்கினம். எனக்கு முதலிலை ஒரே ஆத்திரமாய் வந்தது. ஆனால் யோசிச்சுப் பாத்தால் இதிலை ஆத்திரப்படுறதிலை ஒண்டுமில்லை. எங்கடை சமூகத்தின் கண்கள் எப்பவும் மற்றவையைப் பார்த்துக்கொண்டிருக்கிறது மட்டுமில்லை அவர்களின் செயல்களைப் பார்த்து தனக்குள்ளேயே ஊகங்களை வளர்த்துக்கொண்டு, அந்த ஊகங்களிலேயே வாழ்ந்து கொண்டிருக்கு. இரண்டு குடும்பங்களுக்கிடையில் நெருங்கிய தொடர்பு இருக்குமானால் அது திருமணத்திற்காக ஏற்பட்ட தொடர்பு. ஒரு ஆணையும் பெண்ணையும் ஒன்றாகக் கண்டால் அது காதல். தங்கள் ஊகங்களுக்கு அப்பாற்பட்ட இடங்களாக தங்களைச் சேர்ந்தவர்கள் போய்வந்தால் அது பிள்ளைகளின் திருமணம் அல்லது வேலை விஷயம். பின்னேரம் எங்காவது புறப்பட்டுப் போனால் அது படம் பாக்க... என்ன பியூடல் மனப் பண்புகள். நம் சமூகத்திற்கு, எங்கடை சமூகத்திலை முதல் யுகப் புரட்சியும் வேண்டாம், பொருளாதாரப் புரட்சியும் வேண்டாம், ஒரு சிந்தனைப் புரட்சிதான் வேணும் இப்ப அவசியமாய். முதலிலை மற்றவையைப் பற்றிய சிந்தனைகளை ஒழுங்காகச் சிந்திக்கிற மனப் பக்குவம் வேணும் எங்கடை சனங்களுக்கு"

"அண்ணை நான் நினைச்சன். இந்தச் சிந்தனைப் புரட்சி என்ற சொல்லை. நீயும் சொல்கிறாய். முதலிலை உன்னுடைய 'யுகப் புரட்சி' பத்திரிகையின் பேரை மாத்து. 'சிந்தனைப் புரட்சி' என்று போடு. நான்தான் முதல் கட்டுரை. எங்கள் பியூடல் பண்புகள் நிறைந்த பெண்கள் சமுதாயத்தின் மனப்பான்மையை ஆராய்ஞ்சு ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை" என்றாள் தேவி.

"அடேயப்பா பிறகென்ன. ஆனால் நான் ஏன் யுகப்புரட்சியை மாத்தவேணும். சிந்தனைப் புரட்சி என்று நீயும் ஒரு பத்திரிகையைத் துவக்கு, ரெண்டும் நடக்கட்டும்"

மனைவியின் வார்த்தைகளினால் உண்மையின் தரிசனத்தில் சரிந்து விழுந்த வேலுப்பிள்ளையின் மனம் பிள்ளைகளின் வார்த்தைகளால் நிமிர்ந்து நிற்கவே அவரும் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"பிறகென்ன பத்திரிகை வெளிவந்த அடுத்தநாளே சனங்களின்ரை கோணல் சிந்தனைகள் நேராகிவிடும். நீ நினைக்கிற பெண்களின் மனச் சுதந்திரம் அமுலுக்கு வந்துவிடும், அப்பிடித்தானே. இஞ்சை பாரப்பா உன்னுடைய பிள்ளைகளின் நினைவுகளை" அவர் மனைவியின் பக்கம் பார்த்துச் சிரிக்கிறார். அவள்



ஊரிலுள்ள மரங்களை அழிப்பதால்தான் இந்தப் பேய் பிசாசு முனியெல்லாம் இருக்க இடமில்லாமல் அலையுதுகள்.

எங்கே அலையுதுகள்?

அந்த வீதியில் பார்... வாயில் கொள்ளியோடு போகுதுகள்.

ஓ... அந்த ஹிப்பிகளைச் சொல்கிறியா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரிக்கவில்லை. இவர்கள் விண்ணில் பறக்கிறார்கள். அவள் மண்ணில் அல்லவா நிற்கிறாள்.

''பின்னை என்ன அப்பா. என்ரை உயிர்ச் சினேகிதியின் வீட்டை அவளின்ரை கல்யாணத்துக்கு நான் போகக்கூடாது. போனால் வீண் கதை வரும். இதிலை எனக்கும் குறை அவளுக்கும்குறை. எங்கள் ரண்டுபேற்ரை



மனைவி: பொறுப்புணர்ச்சியில்லாத உங்களைக் கட்டிவிட்டு நான் படுகிற கஷ்டம்... இப்படி வீட்டிற்கு லேட்டா வந்தால்?

கணவன்: இப்ப என்ன குடி மூழ்கிப்போச்சு?

மனைவி; படத்திற்கு லேட்டாப் போச்சு... எப்படிப் போறது!?

— அதிமதுரம்

குறையிலையும் இந்தச் சமூகம் என்ன நிறைவைக் கண்டதோ? போனால் எதையாவது ஊகம் பண்ணும் உலகம் போகாதபோது மட்டும் ஏன் எதையாவது ஊகம் பண்ணி பெரிய பாராட்டுமாலை கொண்டுவந்து சூட்டவில்லை?"

''இவளோடை பெரியகரைச்சல்.. கொப்பர் மட்டும் போய் வந்ததுக்கு இந்தப் பெரிய மாலை என்றால் நீயும் போய் வந்திருந்தால் என்ன நடந்திருக்கும், என்ன பேசுவினம் எண்டதைப் பற்றி யோசியாமல் சத்தம் போடுறாய். உலகத்தின்ரை வாய் எவ்வளவோ பேசும். அந்த வாய்க்குள்ளை அகப்படாமல் சாமர்த்தியமாய் நழுவிக்கொள்ளத் தெரிய வேணும். அதைவிட்டு எங்கடை விருப்பங்களைப் பார்த்துக்கொண்டிருந்தால் முடியுமே?" என்கிறாள் தேவியைப் பார்த்து அம்மா.

''நழுவல்'' சிரிக்கிறான் பாலு.

இந்த நழுவல்தான் மனிதரோடு ஒட்டிக்கொண்டு சமூகத்தோடு ஒட்டிக்கொண்டு சமூகத்தை முன்னேக்கி நகரவிடாமல் ஆணி அடிச்சு வைச்சிருக்கு. எந்தப் பிரச்சனைகளுக்கும் அகப்பட விரும்பாத நழுவல், எந்தப் பிரச்சனைகளுக்கும் முகம் கொடுத்துப் போராடவிரும்பாத நழுவல், சமூகத்தின் ஈகோவைத் தாலாட்டும் நழுவல், இந்த நழுவல்தனத்திற்கு மூட்டை கட்டி வைத்துவிட்டு எப்போ மற்றவர்களின் செயல்களுக்கு, போக்குகளுக்கு, எங்களின் தாழ்வு மனப்பான்மைக்குத் தாலாட்டுப் பாடும் திருப்தியுடன் — கீழ்த் தரமான தாழ்வான அர்த்தங்களை கற்பித்துக்கொள்வதை விட்டு உறுதியான, நேர்மையான சிந்தனைகளைச் சிந்திக்கக் கற்றுக்கொள்கிறோமோ அன்றுதான் மனிதர்களுக்கு மனிதர்கள் அற்பமான காரியங்களில் கூட சுதந்திரமற்று அடிமைப்பட்டுக் கிடக்கும் நிலை மாறி உண்மையான மனித சுதந்திரம் உருவாகும்.

இப்படிச் சிந்திக்கின்ற வேளையிலேயே ஒரு முடிவான முடிவையும் மனத்தில் தீர்மானித்துக் கொண்டான் அவன்.

சற்றுப் பொறுத்து அந்த 'மனிதர்க'ளில் ஒன்று புதினம் உசாவ வீட்டுக்குள் வந்தது.

''கல்யாணம் எப்படி நடந்தது, யார் யார் வந்தார்கள், சுருக்கமா பெரிசா, என்ன சமையல், எத்தனை மூட்டை அரிசி வெந்தது, என்ன மாதிரிக் கூறை, எவ்வளவு அகலக் கரை, என்ன கலர், பொம்பிளைக்கு 'மாட்சா' இருந்ததா, எவ்வளவு சீதனம்..." இப்படியே கேள்விகள் பதில்கள், வெறும் கேள்விகள் பதில்கள்.

தேவி பாலுவைப் பார்த்து அவனுக்குப் புரியக்கூடிய விதமாக முகத்தைச் சுளித்தவாறு ஏதோ வேலையைச் சாட்டி



என்ன நாகரீகமான வெருளி கத்தரித்தோட்டத்தில் வைத்திருக்கிறாய்?

என்ன!

இல்லை... வெருளி பெல்பொட்டம் அணிந்திருக்கு... அதுதான் கேட்டேன்.

— அதிமதுரம்

உள்ளே எழுந்துபோனாள். பாலு அறைக்குள் போய் புத்தகத்தை எடுத்துக்கொண்டான். படிக்க முடிந்தால் தானே. வேண்டாத தொணதொணப்பு. இப்படித் தேவையில்லாத பேச்சுகளைச் சகிக்கமுடியாத வேளைகளில் ஏதாவது சுவிச்சைப் போட்டு காது கேட்கமுடியாமல் பண்ணினால் என்ன? என்று ஒரு சிந்தனை. வெளியே பேச்சு வேறு ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசைக்கு மாறுவதை உணர்ந்தான்.

"இனியென்ன, தேவியின்ரை அலுவல்தானே. போனமுறை மாதிரி ஏமாந்துபோகாமல் சட்டுப்புட்டென்று காரியத்தை முடியுங்கோ. அவனுக்கு அதிர்ஷ்டமிருந்தா எல்லாம் நல்லபடியா நடக்கும்" அனுதாபத்துடன் இலவச ஆலோசனைகளை வழங்கியபடி அவள் எழுந்தபோது பாலு எதிரே வந்து நின்றான்.

'என்ன மாமி என்ன விஷயம்? தேவிக்கு ஏதோ ஏற்பாடு பண்ணியிருக்கிறீங்கள் போலை கிடக்கு"

அவள் அவனை ஒருமாதிரியாகப் பார்த்தாள்.

"போனமுறை இந்தமுறையெண்டு ஏதோ கதைக்கிறீங்கள். தேவிக்கு இன்னும் நாங்கள் கல்யாணம் பேசி வெளிக்கிடேல்லை. நீங்கள் ஒண்டையும் விசாரியாமல் கதையாதேங்கோ மாமி"

"ஊர் உலகம் எல்லாம் கதைக்குது. இனி என்ன விசாரிக்கிறது?"

"உங்களைப்போலச் சிலபேர் சேர்ந்ததுதானே ஊரும் உலக

## நம்பிக்கையில்லாத் தீர்மானம்!

ஒரு யூதத் தந்தை தனது சிறு மகனை ஒரு மரத்தில் ஏற்றிவிட்டு குதிக்குமாறு பணித்தார்.

சிறுவன் தனது கால் கை உடைந்துவிடுமெனக் கூறினான். தந்தையோ ",பயம் வேண்டாம், நான் கீழே நின்று ஏந்துவேன்" எனக் கூறினார். மரத்திலிருந்து குதிக்கும்போது அவனைக் கைகளால் ஏந்தாது விலகி நின்றார் தந்தை. பையன் விழுந்து மூக்கும் முழங்காலும் உடைபட்டு இரத்தப் பெருக்கெடுக்க அழுதான். தந்தை அவனைப் பார்த்து "உலகத்தில் ஒருவரையும் நம்பக்கூடாது என்னும் தத்துவத்தைக் கற்றுக் கொடுப்பதற்காகவே இவ்வாறு செய்தேன். நான் பலரை நம்பி ஏமாந்தவன்" எனக் கூறினார்.


மும். ஏதாவது ஒன்றைக் கேள்விப்பட்டால் சம்பந்தப்பட்டவையோடை கதைச்சு சரியா எண்டதைத் தெரிஞ்சுகொண்டு..."

"அவையின்ரை வீட்டை நீயும் கொப்பரும் கொம்மாவும் போனபடி வந்தபடி இருக்கிறியள். விஷயம் இதுதான் எண்டதை அறிய வேறை என்ன தேவை?"

விஷயம் இதுதான் எண்டதை அறிய வேறை என்ன தேவை. விஷயம் இதுதான்... விஷயம் இதுதான்...

விஷயம் இதுதானா? விஷயமே இதுதானா? எங்கு பார்த்தாலும் யாரைப் பார்த்தாலும் எதைப் பார்த்தாலும் விஷயம் இதுதானா? உலகத்தில் இதைவிட்டால் வேறு விஷயமே இல்லையா? எல்லாவற்றிற்கும் ஆதாரம் இந்த விஷயம் ஒன்றுதானா? நீயும் கொப்பரும் கொம்மாவும் போனபடி வந்தபடி... அப்ப தேவி ஒருத்திதான் போகாதது. அவள் போனால் என்ன? அவளும் போனால் என்ன? யாருக்குப் பயப்பட வேண்டும்? எதற்குப் பயப்பட வேண்டும்? இவர்களுக்கா? இவர்கள் நாவுக்கா? இந்தச் சமூகத்


வீரர்கள் விரும்புவது




எனக்கு இந்தக் 'கப்' வேண்டாம் சேர்....
ஒரு கப் அண்ணா கோப்பி தந்தால் போதும்

**அண்ணா கோப்பி**

அண்ணா தொழிலகம்
இணுவில்



வீடுபோற் சொர்க்கம் வேறில்லை
வீட்டைச் சொர்க்கம்போல் விளங்கவைப்பது தளபாடங்களே

உங்கள் இல்லங்களுக்கு எழிலூட்டும் நவீன உயர்தர தளபாட வகைகளுக்கு

★ **சிவா பேணிச்சர்** ★

11/5, மொம்சாக் கட்டிடம்
21/5 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்:




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னின் பியூடல் மனப்பான்மைக ளுக்கா?

''மாமி, வாழ்க்கையிலே மற்றவையைப்பற்றி நல்லவிதமாகச் சிந்திக்கப்பழகுவது ஒரு நல்ல பாடம். அதை முதலில் பழகிக் கொள்ளுங்கோ. பிறகு மற்றவர்களுக்கு ஆலோசனை வழங்கலாம்"

அவன் விருட்டென்று அறைக்குள் நுழைந்துகொண்டான்.

மாலையில் சற்று நேரத்துடன் தேவியையும் அழைத்துக் கொண்டு புறப்படுகிறான் பாலு.

'' இவ்வளவு சொல்லச் சொல்ல எங்களுக்கு விருப்பமில்லாமல் வரவேற்புக்குப் போயே தீரவேணுமெண்டு அவளையும் கூட்டிக்கொண்டு போருய். போறதுதான் போருய், எப்பன் செல்ல ஐந்து மணிக்குப் போனுல் படத்துக்குப் போகுதுகள் எண்டாவது பாக்கிறவை நினைச்சுக்கொள்ளுவினம். இதைவிட அப்படி நினைக்கிறது பரவாயில்லை'' என்று ஆத்திரமும் ஆற்ருமையுமாக கூறுகிருள் அம்மா.

அவன் நின்று நிதானமாக அவளை நிமிர்ந்து பார்த்துச் சிரிக்கிருன்.

''அம்மா, அப்போதை முழுதும் என்ன கதைச்சமெண்டு மறந்துபோனீங்களே. எங்களைப் பற்றி நாங்கள் என்ன செய்தாலும் எங்கை போனுலும் எப்படி நடந்தாலும் ஏன் அதைச் சரியான முறையில் அர்த்தப்படுத்திக் கொள்ளாமல் ஏதேதோ பிழையான அர்த்தங்களை நினைத்து கண்டபடி பேசி பிரச்சனைகளை இந்தச் சமூகம் கிளப்புது. ஏன் நேர்மையான முறையில் மற்றவர்களைப் பற்றி சிந்திக்கக் கூடாது? என்றெல்லாம் கவலைப் பட்டமே அம்மா."

'‚அதுக்கும் இதுக்கும் இப்ப என்ன?''

''இப்ப நாங்கள் என்ன செய்யப்போறம்? எங்கே போகிறேம் என்பதை மற்றவர்கள் சரியான முறையில் ஊகம் செய்வதற்கு இடம் இருக்கும்போது நாமே எங்களைப்பற்றி தவருன முறையில் பிறர் நினைக்கக்கூடிய விதமா சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பது எந்தளவிற்குச் சரி அம்மா. எங்கள் கொள்கைகளுக்கு எதிராக நாமே நடந்து கொள்வது சரியா அம்மா?''

''என்னவோ தம்பி, நான் சொல்லி நீ கேக்கிற ஆளில்லை. அவள் உன்ரை தங்கச்சி எண்டதை மறக்காமல் இருந்தால் போதும்''

என்று அந்த இரண்டே வரிகளில் எவ்வளவோ அர்த்தங்களையும் முதிய தலைமுறையின் எத்தனையோ பயங்களையும் அடக்கியபடி அவர்கள் அம்மா கூறுகிருள்.

அவற்றை அப்படியே புரிந்து கொண்டவனுக அந்தப் பயங்களை வெல்லக்கூடிய ஒரு புன்னகையை உறுதியான முகத்தில் தவழவிட்டபடி தேவியையும் அழைத்துக் கொண்டு நடந்தான் அவன்.

சமூகத்தின் நல்ல மாற்றங்களுக்காக அந்தச் சமூகத்தில் இருந்துகொண்டு, அந்தச் சமூகத்தையே எதிர்க்கிற அளவுக்கு எவ்வளவு ஒரு மகத்தான நம்பிக்கை இந்த இளைய தலைமுறைக்கு இருக்கிறது. நேர்மையானவற்றிற்குப் போராடும் இந்தப் போர்க்குணம் வேலுப்பிள்ளைக்கு மிகவும் பிடித்திருந்தது.

''சிந்தனைப் புரட்சி என்று சொல்லிச்சுதுகளே. அது விளையாட்டான விஷயமில்லை. என்னுடைய சிந்தனையிலே இவ்வளவு புரட்சியை ஏற்படுத்த முடிந்த இவர்களுக்கு சமூகத்திலே மாற்றம் ஏற்படுத்துவது பெரிய காரியமில்லை''


மனத்தில் பூக்கும் நிறைவோடு — ஒரு தென்பை அளிக்கும் சிரிப்போடு மனைவியின் பக்கம் திரும்பினுர் வேலுப்பிள்ளை.

★



கணவன்: நாங்கள் குடிசையில் வாழ்ந்துகொண்டு பல்கனியில் இருந்து படம் பார்க்கலாமா?

மனைவி: இதைத்தான் அத்தான் ''சிம்பிள் லிவிங் அன்ட் ஹை திங்கிங்" என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள்



கணவன்: இந்த மாம்பழம் வித்த காசுகளைப் பவுத்திரமாக வைத்திரு.

மனைவி: ஏன்?

கணவன்: மாம்பழ சீசன் முடிஞ்சுது... இனி கல்யாண சீசன் வரப்போகுது.

— அதிமதுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது தொடர் நாவல்
முதலாம் பாகம்
அத்தியாயம். 7

# அலை அழைக்கிறது

-இளங்கீரன்

மறுநாள் கப்பல் ஆட்டம் குறைந்து சீராக ஓடிக்கொண்டிருந்தது. ரவீந்திரன் கப்பலின் முகப்பில் நின்றபடி தூரத்தில் கடலுக்குள்ளிருந்து எழும்புவது போன்றிருந்த சூரியோதயக் காட்சியைக் கண்டு களித்துக்கொண்டிருந்தான். அந்த உதயவேளையில் அடிவானமெங்கும் செக்கச் செவேலென்று ஒளிமயமாகிக் கொண்டிருந்தது. 'வானத்தின் புன்னகை எவ்வளவு ரம்மியமாக இருக்குது' என்று வியந்த வண்ணம் அதிலேயே லயித்திருந்தான்.

''நீங்கள் இங்கேதான் இருக்கிறீங்களா?'' என்று ஒரு வீணைக் குரல் திடீரென்று ஒலித்ததும் சரேலெனத் திரும்பிப் பார்த்தான் ரவி. எதிரில் சிற்பம் போல் கீழ்த் தளத்துப் பெண் நின்றுகொண்டிருந்தாள். ரவீந்திரன் புன்னகையுடன் ''அதுதான் என்ர இடம்'' என்று சற்றுத் தூரமாகச் சுட்டிக் காட்டினான்.

அவள் தன் வேல்விழிகளைச் சுழற்றி மேல் தளம் முழுவதையும் ஒரு கண்ணோட்டம் விட்டாள். பிறகு ''இங்கே நல்ல வெளிச்சமும் காற்றுமிருக்கு. வசதியான இடம். கீழே ஒரே வெக்கையாக இருக்கு. வெளிச்சமும் குறைவு, காற்றுமில்லே'' என்று சலிப்புடன் கூறினாள்.

''இங்கே, இந்த வசதியிருக்குதெண்டு அறிஞ்சுதான் இங்கே இடம் பிடிக்கிறதுக்காக மற்றவையோடு முட்டி மோதிக்கொண்டும் வளைஞ்சும் நெளிஞ்சும் ஏணிப்படியில் அவதிப்பட்டுக்கொண்டிருந்தன். அதைக் கண்டு சிரிச்சீங்கள். இப்ப அந்தச் சிரிப்பை எண்ணிப் பாருங்கள். கஷ்டத்தின்பின்னால்தான் சுகம் மறைஞ்சு கிடக்குது. இப்ப இது விளங்குமெண்டு நினைக்கிறன்''

அவள் தன் செய்கைக்காக வருந்தினாள் போலும். முகம் வாடியது. ''என்னை மன்னிச்சிடுங்க'' என்று குரல் தழுதழுக்கக் கூறினாள்.

ரவீந்திரன் லேசாய்ச் சிரித்துக்கொண்டே ''சரிதான் இதற்காக ஏன் மன்னிப்புக் கேட்க வேண்டும்?'' என்று கேட்டுவிட்டு ''நீங்கள் மலேயாவுக்குப் போவது இதுதான் முதல் தடவையா, அல்லது...'' என்று கேள்வியை முடிக்காமல் நிறுத்தினான்.

''நாங்கள் மலேயாவில்தான் இருக்கிறோம். ரெண்டு மாசத்துக்கு முன்னாலே ஊருக்கு வந்திட்டுத் திரும்புகிறோம்''

''மலேயாவில் எந்த இடம்?''

''கோலாலம்பூர். நீங்கள் எங்கே போறீங்க?''

''ஈப்போ''

''ஈப்போவா...?'' என்று விழிகளை அகல விரித்துச் சற்று வியப்புடன் கேட்டவள் ''நாலு வருஷத்துக்கு முன்பு நாங்களும் ஈப்போவில்தான் இருந்தோம்'' என்றாள்,

அவள் இதைச் சொன்னதும் ரவி தன் தந்தையை நினைத்துக் கொண்டான். ''ஈப்போவில் புண்ணியமூர்த்தி என்பவரைத் தெரியுமா?'' என்று ஆவலோடு கேட்டான்.

> யாழ்ப்பாணத்தில் நீண்ட காலம் வாழ்ந்த ஒரு ஆங்கிலேயரைப் பார்த்து ஒருவர் ''தமிழ் நேஷனைப் பற்றி என்ன நினைக்கிறீர்?'' எனக் கேட்டார். அதற்கு அவர் ''திருமணம் செய்வதற்கு டொனேஷன் வாங்கும் நேஷன்'' எனப் பதில் கூறினர்.
>
> தகவல்:- நாரதர்

''புண்ணியமூர்த்தியா...?'' என்று திரும்பவும் சற்று வியப்போடு கேட்டுவிட்டு, விரல்களை நெற்றிப் பொட்டில் வைத்துக் கொண்டு சில நிமிடங்கள் யோசித்தாள். பிறகு ''நீங்க புண்ணியமூர்த்தி மாஸ்டரைத்தான் சொல்றீங்கபோலிருக்கு. அவரும் சிலோன்காரர்தான், ஊர்கூட யாழ்ப்பாணந்தான். ஆமா. அவர்...?'' என்று கேள்வியை முடிக்காமல் ரவியைப் பார்த்தாள்,

''நீங்கள் சொல்கிற மாஸ்டர் நிச்சயமாய் என் தகப்பனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உங்க மூத்த மகன் உங்களைப்போலவோ அல்லது தகப்பனைப்போலவோ?

ஆருக்குத் தெரியும்... அவன் விடியமுந்தி ரியூஷனுக்குப் போருன், பின்பு பள்ளிக்குப்போருன், மறுபடி ரியூஷன்... என் பிள்ளை முகத்தை எனக்குத் தெரியாதே!

தான்" என்று சிறிது பரபரப் போடும், சந்தோஷத்தோடும் கூறினன் ரவி"

"ஓ... அப்படியா...!" என்று அவளும் மகிழ்ச்சி பொங்கக் கூறிவிட்டு "எங்களுக்குப் பக்கத்தில் ஒரு யாழ்ப்பாணத்தார் குடும்பம் இருந்தது. உங்கள் ஐயா அடிக்கடி அங்கே வருவார். யாழ்ப்பாணக் குடும்பத்தோடு நாங்களும் ரொம்ப அந்நியோன்னியமாயிருந்தோம். பெரும்பாலும் என் பொழுது அங்கேதான் கழியும். அதனல் அவரை எங்களுக்கு நல்லாய்த் தெரியும். தனக்கு ஊரில் ஒரு மகன் இருப்பதாகச் சொன்னதுகூட ஞாபகமிருக்கு. இப்போ அந்த மகனை நேரிலேயே பார்க்கிறப்போ எவ்வளவு சந்தோஷமாயிருக்கு" என்று விழிகளை மலர்த்தியவாறு கூறினுள்.

ரவிக்கு உள்ளமெல்லாம் குதூகலித்தது. பரபரப்பு மேலோங்க "நீங்கள் சொல்றதைக் கேட்கிறபோது என்ர ஐயாவை நேரில் காண்பதுபோல இருக்குது. பார்த்தீங்களா? சற்று முன்புவரை முற்றிலும் அறிமுகமில்லாதவர்களாயிருந்த நாங்கள் இப்ப ஒருவரையொருவர் நல்லாய்த் தெரிந்தவர்களாய்விட்டோம். பிரயாணம் என்பது இப்பிடித்தான். சிறிதும் கற்பனை செய்து பார்க்காத அனுபவங்கள் கூட கிடைத்துவிடுகிறது" என்று உற்சாகத்துடன் கூறினன்.

அவளும் ரவி கூறியதை ஆமோதிப்பதுபோல் தலையை ஆட்டிவிட்டு "உங்க பேரு?" என்று இழுத்து நிறுத்தினுள்.

"ரவீந்திரன்"

அவளும் அதை லேசாய் ஒருமுறை உச்சரித்துவிட்டு 'உங்க பேரு எனக்கு நல்லாய்ப் பிடிச்சிருக்கு' என்ருள்.

"எனக்குக்கூட இந்தப் பெயரில் ஒரு தனி விருப்பம். என்ர ஐயா எனக்கு இந்தப் பெயரைச் சூட்டியதுக்காக அவரைப் பல தடவை எனக்குள் பாராட்டியிருக்கிறன்"

அவள் இதழ்விரித்து லேசாய் சிரித்தபடி "அழகான பேரு. அதுக்காகத்தான் பாராட்டியிருப்பீங்க" என்ருள்.

"அழகான பெயர் என்கிறதுக்காக மட்டுமில்லை. அது ஒரு மகாகவியின் பெயர். அதனுலே தான்..."

"மகாகவின்னு ரவீந்திரநாத் தாகூரைத்தான் சொல்றீங்க, இல்லையா?"

"ஓம். உங்களின் கேள்வியைப் பார்த்தால், நீங்களும் அவரை நல்லாய் அறிந்து வைத்திருக்கிறீங்க போலிருக்குது"

"அப்பிடி ஒண்ணும் அதிகமாயில்லே. என் அப்பா அவரைப் பத்தி அடிக்கடி சொல்லியிருக்கிருர்"



ஆடி மாசத்தில் கடவுளைக்கூடச் சந்திக்கலாம்... இந்தக் கல்யாணத் தரகரைச் சந்திக்க முடியாது.

ஏன்?

ஆடியில் அவர்கள் 'பிஸி' ஆவணி கல்யாண நாட்கள் நிறைந்த மாசம்!

— அதிமதுரம்

"அப்ப, அவருடைய கவிதைகளை நீங்கள் படித்ததில்லையா"

"ஏதோ சில கவிதைகளைப் படிச்சிருக்கேன்"

"கொஞ்சமாவது படிச்சிருக்கிறீங்களே, சந்தோஷம்"

"நீங்கள் நிறையப் படிச்சிருப்பீங்கபோலிருக்கு"

ரவி இதற்குப் பதில் சொல்லாமல் புன்னகை செய்துவிட்டு "தாகூரிலே உங்க அப்பாவுக்கு நிறைய ஈடுபாடுபோல"

"தாகூரில மட்டுமில்லே. பொதுவாய்ச் சிறந்த கவிஞர்களை அவருக்கு ரொம்பப் பிடிக்கும்"

"அப்ப அவர் ஒரு இலக்கிய ரசிகர்?"


அவள் "ஓம்" என்று தலையை ஆட்டினுள்.

"நீங்கள்...? அப்பாவைப் போல் மகளும் இருக்கவேண்டுமே?"

அவள் பதில் சொல்லவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சில நிமிடங்கள் ஆழ்கடலேயே பார்த்துக்கொண்டிருந்துவிட்டு ''தாகூரின் கவிதைகளில் உங்களுக்கு எது நல்லாய்ப் பிடிக்கும்?'' என்று கேட்டாள்.

''பொதுவாய் எல்லாக் கவிதைகளும்தான். ஆனல் அவருடைய கவிதைகளையெல்லாம் விட, அவர் சொல்லியிருக்கிற ஒரு விஷயம் எனக்கு நல்லாய்ப் பிடித்திருக்குது.''

''அப்படி விசேஷமாய் அவர் என்ன சொல்லியிருக்கார்?"

''என் ஆண்டவனே! நான் உம்மிடம் செய்துகொள்ளும் பிரார்த்தனை இதுவே. எனது இன்பங்களையும் துன்பங்களையும் அநாயாசமாகத் தாங்கிக்கொள்ளும் சக்தியை எனக்குக் கொடு. ஏழைகளை எந்தக் காலத்திலும் கைவிடாதிருப்பதற்கும், இறுமாப்புக்கொண்ட வலியவர்களின் முன்னல் பணிந்துவிடாதிருப்பதற்குமான சக்தியை எனக்குக் கொடு என்று சொல்லியிருக்கிறர்.''

அவள் ரவி சொன்ன தாகூரின் பிரார்த்தனையை மிகவும் உன்னிப்பாய்க் கேட்டுவிட்டுச் சிறிது நேரம் சிந்திப்பதுபோலிருந்தாள். பிறகு ''தாகூர் சொன்ன இதை என் அப்பா எனக்குச் சொல்லலலே. ஆனல் நீங்கள் சொன்னது நல்லதாய்ப் போச்சுது. அப்பாவையும் விட நீங்க தாகூரை நிறையப் படிச்சிருக்கிறீங்க''

ரவி இதற்குப் பதில் சொல்லாமல் நீலம் பாரித்திருந்த வானத்தைப் பார்த்தான்.

''ஆமா, நீங்க என்ன செய்துகொண்டிருக்கிறீங்க.''

அவள் இப்படிக் கேட்டதும், முகத்தைத் திருப்பி 'நானு...? இப்ப உங்களுடன் பேசிக்கொண்டிருக்கிறேன்'' என்று சிரித்துக்கொண்டே கூறினன்.

அவளும் லேசாய்ச் சிரித்தாள். ''அது தெரியுது- ஆனு நான் கேட்டது...''

ரவி திரும்பவும் சிரித்துக்கொண்டே ''ஓ... விளங்குது. நான் எழுதிக்கொண்டிருக்கிறன்... அதாவது கதைகள் - நாவல்கள்...''

அவள் ரவீந்திரனை வியப்புடன் பார்த்தாள். ''அப்பிடியா...? அப்போ நான் ஒரு எழுத்தாளரோட பேசிக்கொண்டிருக்கிறேன். இது என் அதிஷ்டந்தான்'' என்று உற்சாகமும் மகிழ்ச்சியும் கலக்கக் கூறினள்.

''எனக்கும் அதிர்ஷ்டந்தான். என்ர ஐயாவை நல்லாய்த் தெரிஞ்ச உங்களைக் கப்பலில் சந்திக்க முடிஞ்சுதல்லவா?''

அவள் சிரித்தாள். ''ஒருவேளை, எங்க ரெண்டு பேருடைய அதிர்ஷடங்களையும், இந்தப் பிரயாணத்தையும் கூட கதையாகவோ. நாவலாகவோ எழுதுவீங்கள், இல்லையா?''

''அப்பிடி ஒரு உந்துதல் ஏற்பட்டால் எழுதுவன். அதிருக்கட்டும். நீங்கள் கதைகள், நாவல்கள் படிப்பதுண்டா?"

''ஏதோ படிக்கிறதுதான். இப்பிடிச் சொல்றதிலை நான் பெரிய இலக்கிய ரசிகைன்னு எண்ணீடாதீங்க'' என்ருள் லேசாய்ச் சிரித்துக்கொண்டே.

''கதைகள், நாவல்கள் படிக்கிறவர்கள் எல்லாரையும் இலக்கிய ரசிகர்கள் எண்டு சொல்லமுடியாதுதான். துப்பறியும் கதைகள், மர்ம நாவல்கள், வெறும் கற்பனையான காதல் கதைகள் — இதையெல்லாம் படிக்கிறவர்கள் இலக்கிய ரசிகர்களா, என்ன?"

''உங்களுக்கு காதல் பிடிக்காதோ?'' ஒரு வினவை வீசிய அவள் தவறுதலாய் அந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டதைப் போன்று கீழ் உதட்டை லேசாய்க் கடித்துக்கொண்டு சட்டென்று பார்வையைக் கீழே






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதித்தாள்.

ரவி பதில் சொல்லாமல் அவளைக் கூர்ந்து பார்த்தான். தொடர்ந்து ஒரு புன்னகையை விரித்துவிட்டு ''காதலைப் பற்றிய கதை இப்ப எதுக்கு? அது இருக்கட்டும். என்னைப்பற்றி இவ்வளவு 'தூரம் விசாரித்த நீங்கள் உங்கள் பெயரை இன்னும் சொல்லேல்லியே?

அவள் விழிகளை உயர்த்தாமலே ''நீங்க கேட்கல்லே, நான் சொல்லல்லே'' என்றாள், இதழ்களில் புன்னகை நெளிய.

''சரி, இப்ப கேட்கிறன் சொல்லுங்கள்''

''என் பெயர் வந்து... கண்ணம்மா''

''கண்ணம்மாவா...! பொருத்தமான பெயர்''

அவள் சட்டென்று விழிகளை உயர்த்தி அதே புன்னகையுடன் ''அப்பிடி என்ன பொருத்தத்தைக் கண்டீங்க?'' என்றாள்.

''இயற்கை உங்களுக்கு அளித்துள்ள முதன்மையான ஆபரணம் இந்தக் கண்கள்தான். உங்கள் அப்பா இலக்கிய ரசிகரானபடியால் பொருத்தமாகவே பெயர் வைத்திருக்கிறார்.''

கண்ணம்மாவின் முகம் அந்திவானத்தைப்போலச் சிவந்தது. நாணத்தால் தனது அழகான விழிகளைத் திரும்பவும் கீழே ஓடவிட்டாள்.

ரவி மெல்லச் சிரித்தான். ''கண்கள் முதன்மையான ஆபரணமென்டால் பெண்களின் முதலாவது குழந்தை எது தெரியுமா?''

கண்ணம்மா மேலும் முகம் சிவக்க ''எனக்கு இன்னும் கல்யாணம் ஆகல்லே'' என்று விழிகளைத் தூக்காமலே சொன்னாள்.

''கழுத்தைப் பார்த்தாலே அது தெரியுது. கல்யாணமாகாத பெண்களுக்குக்கூட அந்த முதலாவது குழந்தை இருக்குது''

''நீங்க சொல்றது விசித்திரமாயிருக்கு''

''அந்தக் குழந்தைகூட விசித்திரமானதுதான்''

''அந்த விசித்திரக் குழந்தையைச் சொல்லுங்களேன்?''

''நாணம். குழந்தை அந்நியரைக் கண்டால் முகத்தைத் திருப்பிக்கொள்ளும், அல்லது பின்னால் ஒளிந்துகொள்ளும். பெண்களின் நாணமான குழந்தையோ எடுத்ததுக்கெல்லாம் முன்னால் — குறிப்பாக அந்நியரைக் கண்டதும் முன்னாலே வந்து நிற்கும்'' என்று சிரிப்புக்கிடையில் சொன்னான்.

'களுக்'கென்று கண்ணம்மாவும் சிரித்தாள். மறுகணம் ''நான் இங்கே நின்றால் இரண்டாவது குழந்தையைப் பத்தியும் சொல்லுவீங்க'' என்று சிரித்தவாறே கூறிவிட்டு விர்ரென்று பறந்தாள்.

— தொடரும்.

# ஏமாற்றம்!



**இணுவையூர் மோகனன்**

சிறகடித்துப் பறந்துவரும் புள்ளினந்தன்
சிந்தைதனில் ஏமாற்றம் படுவதில்லை.
சிறுகாயும் சிறுஅரும்பும் பூவுங்கொண்ட
சிறுமரமும் ஏமாற்றப் படுவதில்லை.
அறம்பாடும் இறகோசை வண்டினங்கள்
அலைந்துணவுக் கேமாற்றப் படுவதில்லை.
தறிகெட்டுப் பிறந்துவிட்ட மனிதர்மட்டும்
தவிக்கின்றார் ஏமாற்றப் படுவதாலே.

இரவுபகல் மாறிமாறி வருவதெல்லாம்
இயற்கைதன் நியதிகளில் ஒன்றேயானால்
நரகத்தில் தீமைசெய்தோர் நசுங்கல்கூட
நடைமுறையில் இயற்கையது — நியதியானால்
வருடத்தில் பருவங்கள் நாலேயென்று
வரையறுப்பும் இயற்கையினோர் நியதியானால்
குரலோடு பிறந்தவனுக்(கு) ஏமாற்றங்கள்
கூடிவரலும் இயற்கை நியதியன்றோ.

பாலூட்டும் போதுபார்த்த முகத்தைப்போல்
பாரினிலே முகங்கள்பல காணும்போது
தாலாட்டுந் தன்தாயின் முகமென்றெண்ணித்
தவிக்கின்ற பிள்ளைக்கோர் ஏமாற்றந்தான்.
மேலான உற்பத்திப் பெருக்கஞ்செய்ய
வேண்டுமழை பொழியுமென்றே நம்பிவானம்
எளாது என்று சொல்லி வரட்சிமிஞ்ச
ஏங்குகின்ற உழவனுக்கும் ஏமாற்றந்தான்.

கல்லூரிப் பரீட்சையிலே திறமாய்ச்செய்து
கட்டாய சித்தியெய்தக் காத்திருந்து
இல்லையென்று வருகின்ற முடிவினாலே
இடிந்த மனத்தவருக்கும் ஏமாற்றந்தான்,
வல்லமையாம் பலவழியில் உழைத்தும் ஈற்றில்
வளர்ச்சியின்றி வழுக்கிநிதம் விழுவோருக்கும்
தொல்லைதரும் ஏமாற்றம் சொந்தமாகத்
துயர்த்தோல்வி மனிதனுக்கு முதுசொமாமோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு போத்தில் சாராயமும் ஒரு சண்டியனும்

நட்டர் செல்லையாவின் இரத்தம் கொதித்துக் கொண்டிருந்தது. அவருக்கு மாத்திரம் அப்போது முகத்தில் மீசை இருந்திருந்தால் அது துடித்த வேகத்திற்கு ஒரு வேகமாளியைப் பூட்டிப் பார்த்திருந்தால் அதுகூட வெடித்துப் பறந்திருக்கும். இப்போது அவர் முகத்தில் மீசை இல்லாத காரணத்தால் அவர் பொச்சு மட்டைத் தலையில் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கிடந்த சில நரைத்த மயிர்கள் துடியாகத் துடித்துக் கொண்டிருந்தன. நரம்புகள் புடைத்து... தோள்கள் விம்மி...

நட்டர் செல்லையாவின் இந்த அங்க அவயவங்களின் ஆவேசத்துக்குக் காரணம் இல்லாமல் இல்லை. தன் நண்பனன படினம் நடராசாவுக்கு இந்த நட்டர் செல்லையா பத்து நாட்களுக்கு முன் ஒரு பத்து ரூபா கடன் கொடுத்திருந்தார். இன்றோடு ஐந்து தடவை வாய்விட்டுக் கேட்டுவிட்டார். படினம் நடராசாவோ கடந்த ஐந்து நாட்களாக நட்டரின் பொச்சுமட்டைத் தலை மினுக்கம் கண்டதும் அருகில் தென்படும் ஏதாவது ஒரு ஒழுங்கையில் திரும்பி மறைந்து விடுவார். இன்று காலை அந்தச் சந்தியில் படினம் நட்டரிடம் வசையாக மாட்டிக்கொண்டபோது... நடராசாவின் மடியில் எட்டிப் பிடித்தார் நட்டர் செல்லையா.

"நீ இப்ப காசு தரப்போறியோ இல்லையோ...?"

"ஓய்...! உம்மடை காசு பத்து ரூபாவை மடக்கி வைச்சு மாடிவீடா கட்டப்போறன்? நீர் வசதியுள்ள நேரம் கடன் தந்தீர், நானும் வசதியுள்ள நேரம் திருப்பித் தருவன்தானே... அதுக்காக நீர் இப்பிடி நடுச்சந்தியில் நாலுபேர் பாக்க மடியைப் பிடிச்சுக் கேட்டது வலு பிழை. மனுசனுக்குக் கடன் குடுக்கத் தெரிஞ்சாப் போதாது. கொஞ்சம் கண்ணியமாக அதைக் கேக்கத் தெரிய வேணும்... தெரிஞ்சுதோ... மடிக் கையை விடும்காணும்!"

என்று நடராசா ஆவேசமாக அலறி நட்டரின் மடிக் கையை அனுசயமாகத் தட்டிவிட்டு முச்சந்தியால் திரும்பி மறைந்துவிட்டார், செல்லையாவிற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. நடராசாவுக்கு பத்து ரூபா கடன் கொடுத்ததற்காக தன்னை இப்படி நடுச்சந்தியில் நாலு சனம் பார்க்க சே...! அப்போதே கையாலும் காலாலும் இழக்கியிருப்பார்... தான் இரண்டு நாட்களாக நஞ்சிப் பிடிப்பு மருந்து சாப்பிடுவது ஞாபகம் வரவே மடங்கி மௌனமாகினார்.

"நான் உவனுக்கு அடிக்க ஏவாட்டியும் ஆள் வைச்சாவது அடிக்கேல்லை... பத்து ரூபா காசு போனாப் போகுது... உவனுக்குப் பாடம் படிப்பிக்காமல் விடுறேல்லை..."

சபதம் எடுத்தார் இப்போது அவர் உடல் பதறிக்கொண்டிருந்தது. இந்தப் பதட்டத்தை நிறுத்தவேண்டுமானால் ஒண்டோ ஒண்டரையோ உள்ளே போகவேண்டும். மடியைத் தடவினார், இரண்டு ரூபாத் தாள் வேட்டி முடிச்சில் பக்குவமாக இருந்தது. எட்டித் தவறணைக்குப் பாய்ந்தார்.

பிளாவை உருவி எடுத்து தென்னையில் தட்டிச் சுத்தப்படுத்தி "இஞ்சாலை" எனக்கு மொங்கு பீல் தாடா மோனை"

என்று கூறி... உமிழ்நீரை முண்டி விழுங்கி... கள்ளை வாங்கும்போது... முகவீணை வாசிப்பதைப்போல் வாயில் பிளாவை வைத்து இரண்டு உறுஞ்சல் உறுஞ்சி... மண் கோலி பச்சைப் பிள்ளையை நிலத்தில் வளர்த்தும் பக்குவத்தில் ஆட்டுவாய் கந்தையா கள்ளுப்பிளா வைப்பதை ஓரக்கண்ணால் கண்டுவிட்டார் செல்லையா. "அருமையான யோசனை சொல்ல அசல் ஆள்!" என்று மனதில் எண்ணியபடி கள்ளுப் பிளாவை கையில் பிடித்து கந்தையாவின் பக்கம் அசைந்தார்.

— குமார் தனபால் —

"கனகாலத்திற்குப் பிறகு இஞ்சாலை...? — கந்தையா முதல் முதல் வினவினார்.

"அதெல்லாம் கிடக்கட்டும். உனக்கு அரைக்கள்ளு வாங்கித் தருவன் ஒரு யோசினை சொல்ல வேணும்." — இது செல்லையா.

"அரைக் கள்ளுக் கிடக்கட்டும். நீ விஷயத்தைச் சொல்லன்"

செல்லையா படினம் நடராசாவுக்கு பத்து ரூபா கடன் கொடுத்ததில் இருந்து சற்று முன் தான் நடுச்சந்தியில் பட்ட பரிசு கேடுடையும் சொல்லி, "அவனுக்கு என்னாலை அடிக்கேலாது... ஆள் வைச்சாவது அடிப்பிக்கவேணும்... எவ்வளவு செலவழிஞ்சா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை பரவாயில்லை... நீ ஒரு யோசினை சொல்லு...?''

''ஒருத்தன் இருக்கிறன் நீ கேள்விப்பட்டிருப்பாய்... பேர்த்திலடிப் பொன்னுத்துரையெண்டு. ஆளைப் புடிச்சாவெண்டா விடமாட்டான். ஆள் வாறதெண்டா ஒரு அரைப்போத்தில் கறுப்பணுவது மாட்டவேணும்.''

''அரைப்போத்திலென்ன... முழுப்போத்தில் தென்னஞ் சாராயமே கொண்டுவாறன்... நீ ஆளை ஒருக்காக் காட்டு... ஆளை முழுக வார்த்து விடுறன்'' .

''பிறகென்ன... நீ பின்னேரம் ஆயித்தமா வா விஷயத்தை முடிப்பம்'' — ஆட்டுவாய்க் கந்தையாவுக்கு அரைப்போத்தல் கள்ளுப்பில் தானம் செய்துவிட்டு அடுத்ததாக தன் வீட்டுப் படலைக்குத் தாவினார் நட்டர்.

''எடியே... அன்னம்மா...!'' செல்லையாவின் இந்த வீரகர்ச்சனையைக் கேட்டதும் ஆட்டுக்குக் குழை முறித்துக்கொண்டு கோடிப் பக்கமாக நின்ற அன்னம்மா என்னவோ ஏதோ என்று பதறியடித்து இரண்டு எட்டில் முற்றத்திற்குப் பாயவிருந்தவள் மேயக் கட்டிய ஆட்டின் கயிறு தடக்கி குப்புற விழுந்தாள்.

''பேயடிப்பாளுக்கு எந்தநேரமும் பிலாதிதான்... எங்கையடி அப்போதை கூப்பன் எடுக்கத் தந்த காசு?'' கயிறு தடக்கி விழுந்தவளைக் காலால் மிதிப்பதைப் போன்ற கேள்வி. விழுந்த நோவையும் மறந்தாள் அன்னம்மா.

''ஏனிப்ப உங்களுக்கு அது? கூப்பன் எடுத்தாத்தான் நாளைக்குச் சமையல்.''

''கனக்கக் கதைச்சியெண்டாப் பல்லுடைச்சுப்போடுவன். கூப்பன் எடுக்காட்டியும் பரவாயில்லை. நீ காசை எடு.''

இனி அடுத்த கேள்வி கேட்டால்... அனுபவப்பட்ட அன்னம்மா மூச்சுப் பேச்சில்லாமல் ''துலைவான் கொண்டுபோருன் குடிக்க'' என்று மனதிற்குள் புறுபுறுத்தபடி முடிச்சில் இருந்த காசை அவிட்டாள்.

''தக்லு பெருக்கு முன்னால நான் பட்ட பரிசுகேடு உனக்குத் தெரியுமோ? சாப்பாடு இல்லாட்டியும் பரவாயில்லை. கொண்டா காசை.'' அன்னம்மாவின் கையிலிருந்த காசு பதினைந்து ரூபா நட்டரின் கைக்கு மாறியது.

எந்தநேரமும் போத்திலும் பையுமாக குசினி மூலையில் தொங்கும் ஓலைப்பையை எட்டிக் கழற்றினார். பலகையில் கவுட்டிருந்த கண்ணாடிக் கிளாசையும் எடுத்தார்.

இங்கிருந்து யாழ்ப்பாணம் போய் குவறனைனில் ஒரு போத்தல் தென்னஞ் சாராயத்துடன் திரும்பவும் நாலு மணியாகவும் கணக்காக இருந்தது.

ஆட்டுவாய்க் கந்தையாவைக் காண தவறணைக்கு விரைந்தார்.

கந்தையா அப்போதுதான் அரையோ ஒன்ருே மாட்டிவிட்டு சுருட்டுப்புகையுடன் செல்லையாவை எதிர்நோக்கிக் காத்திருந்தார்

''கந்தையாண்ணை கெதியா அலுவலை முடிக்கவேணும். நடராசாவுக்குப் பொன்னுத்துரை பேரட்டு உழக்கிறதை நான் கண் குளிரப் பார்க்கவேணும்... எழும்பன் போவம்.''

செல்லையா துரிதப்படுத்தினார். செல்லையாவின் ஓலைப்பையில் என்ன இருக்கும் என்பதை ஊகித்துக்கொண்ட கந்தையாவுக்கு ஒரே ஆனந்தம். ஒரு ராம் சாராயமாவது கந்தையாவுக்குக் கிடைக்காமல் விட்டுவிடுமா? ''இப்போது இறங்கியிருக்கும் புளிச்சல் கள்ளுடன் எப்பன் சாராயம் அடிச்சாக் காணும். நான் பெருவிரலிலைதான் நிப்பன்'' என்று மனம் அவாப்பட வேட்டி மணலைத் தட்டியபடி எழுந்தார்.

அதோ போத்திலடி பொன்னுத்துரை அதிகமாக உலாவும் ஆலடிச்சந்தி அண்மித்துவிட்டது.

''என்னண்ணை ஆளைக் காணேல்லை...'' என்று செல்லையா அங்கலாய்த்தார்.

அப்போது சின்னப்புவின் தேனீர்க் கடைக்குப் பின்புறமிருந்து பிறங்கையால் வாயைத் துடைத்தபடி பொன்னுத்துரை வீதியில் ஏறியதைக் கந்தையாவின் கள்ளுமுட்டிக் கண்கள் கண்டுவிட்டன.

''ஆள் வாருன்! கும்பிடப் போன தெய்வம் குறுக்க வந்து குதித்தபாதிரி. ''நீ பேசாமல் இரு நான் ஆளை மடக்கித்தாறன்'' கந்தையா பொன்னுத்துரையிடம் விரைந்தார்.

''என்ன... காது மட்டும் கடவாய் விரியுது?'' கந்தையா



காதலன்: நான் உன் மீது வைத்துள்ள அன்பு ஒரு காசோலையைப் போன்றது!

காதலி: அவ்வளவு ஜாக்கிரதையாகவும், பெறுமதி உள்ளதாகவும் என் மீது அன்பு வைத்திருக்கிறீர்களா.

காதலன்: ஆமாம்... காசோலையும் முப்பது நாள்தான் பெறுமதி. உன் மீது உள்ள மோகமும் முப்பது நாள் தான்.

— ச. ரா. பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின் இளிப்பைப் பார்த்து பொன் னுத்துரை இப்படி நளினமாக விஞவிஞர்.

''ஒண்டுமில்லே பொன்னுத் துரை... உன்னுலே ஒரு விஷயம் நடக்கவேணும்... இஞ்சை செல் லேயாவும் வந்திருக்கிருர்...'. என்று கந்தையா முடிக்குமுன்பே

''எட, இவரை எனக்கு வடி வாத் தெரியும். எங்கடை பொக் குவாய் பொன்னுவுக்கு அடிச்சுப் பல்லுக் கொட்டளனீங்களெல் லே...'' — செல்லேயா ஓலேப்பை யுடன் அருகில் வந்தார்.

''அதுக்கு இப்ப என்ன....'' பொன்னுத்துரை குதர்க்கமாகக் கேட்டான்.

''பொன்னுத்துரை நீதான் செல்லேயாவுக்கு உதவி செய்ய வேணும்... ஆள் போத்திலோடை வந்திருக்கிருர்.''

போத்தில் என்ற வார்த்தை யைக் கேட்டதும், ''அப்ப... வாருங்கோ கடைக்குப் பின்பக்கம் போவம்." என்றபடி பொன்னுத் துரை சின்னப்புவின் தேனீர்க் கடைக்குப் பின்னுலுள்ள விறகு கொட்டிலுக்குப் போனுன். கந் தையா செல்லேயாவைப் பார்த்து கண் சிமிட்டி தனக்குப் பின்னுல் வரும்படி சைகை கொடுக்க மூவ ரும் விறகு கொட்டிலுக்கு வந்து



அறிவாளிக்கும் முட்டா ளுக்கும் இடையே என்ன வித்தியாசம்?

அறிவாளி இப்படிப் பட்ட கேள்வியை ஒருபோ தும் கேட்கவேமாட்டான்.

சேர்ந்தனர்.

''என்ன விஷயம்?'' பொன் னுத்துரை செல்லேயாவின் கையில் தொங்கிய ஓலேப்பையைப் பார்த் தபடியே கேட்டார்.

''சொல்லுறம் இதிலே கொஞ் சம் எடுங்கோ என்றபடி போத் திலேயும் கிளாசையும் தூக்கி முன் னுல் வைத்தார்.

''இப்ப நான் சின்னப்புவிடம் காப்போத்தில் அடிச்சனுன். கலக்க வேணும்'' என்று பிகு பண்ணியபடி போத்திலேத் திருகி தானும் ஒரு புல் கிளாஸ் எடுத்து செல்லேயா, கந்தையா ஆகியோ ருக்கும் நீட்டினுன் பொன்னுத் துரை.

''எங்கடை சாராயத்தையே எங்களுக்கே அளவாய் ஊத்தித் தாருன்... எண்டாலும் விஷயம் நடந்தாக் காணும்" என்று மன தில் நினேத்து மடக்கென சாரா யத்தை உறிஞ்சிஞர் செல்லேயா. பீடியையும் தீப்பெட்டியையும் எடுத்த பொன்னுத்துரை ''சரி விஷயத்துக்கு வாருங்கோ" என் ருன்.

படிவம் நடராசாவுக்கு பத்து ரூபா கடன் கொடுத்ததிலிருந்து அவனுக்கு ரெண்டு போட்டாக் காணும் என்றமட்டும் மடமட வென சொல்லி முடிக்கு முன்பே பொன்னுத்துரை ஒரு போத்தில் சாராயத்தைக் காப்போத்திலாக் கிக் கீழே வைத்தான்.

''உது எனக்குப் பெரிய விஷ யமில்லே... ஆள் இப்ப எங்கை நிப்பன்?'' என்றபடி மீண்டும் போத்திலேத் தூக்கி கிளாசை


புதுப்புது வண்ணங்களிலான
புதுமைமிகு புடவைத்தினுசுகளின்
தெரிவுக்கு

சிங்காரம்ஸ்

நங்கையர் மனம் நாடும்
நவநாகரீக நகைகளின்
நம்பகமான தெரிவுக்கு

டைமா நகை மாளிகை

47, செட்டியார் தெரு, கொழும்பு
தொலேபேசி 20875




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரப்பினான் பொன்னுத்துரை.

முதல் முதல் கிடைத்த ஒவ்வொரு ராம் சாராயத்தை விட ஒரு சொட்டுக்கூட மீண்டும் பொன்னுத்துரை அவர்களுக்குக் கொடுக்கவில்லை. செல்லையாவும் கந்தையாவும் காலியாகும் போத்திலைப் பார்த்து சப்புக் கொட்டிக் கொண்டார்கள்.

இப்போது பொன்னுத்துரை நிறைகுடமாகிவிட்டான். நாருவிஸ்ற் ஆட கண்கள் சிவந்து முகம் பயங்கரமாகியது. செல்லையாவும் கந்தையாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

"கந்தையா... உனக்கு என்னைப்பற்றித் தெரியாது. படினம் நர்றாசாவை பாட்ஸ் பாட்ஸாக் கழட்டிப்போட்டுத்தான் மற்ற வேலை பாப்பன். எந்தப் பொலிச இஞ்சுப்பற்றருக்கும் பயப்பிட மாட்டன். டேய்... ஆரடா அவன்? சண்டித்தனம் விர்றவன் வாறவனெல்லாம் வா..." காவடி ஆட்டத்துக்குத் தயாராவதைப் போல் காலியாகக் கிடந்த சாராயப் போத்திலைக் குனிந்து எடுத்தான் பொன்னுத்துரை. தலை தெறித்த வெறி.

நிலமை மோசமாவதைக் கண்ட கந்தையா "வாறன் உதிலை ஒரு சுருட்டு வேண்டிக் கொண்டு" என்று நழுவினார். செல்லையாவக்கு ஒன்றும் புரியவில்லை.

"அப்ப வாருங்கோவன் ஆளைக் காட்டிறன்" பொன்னுத்துரையைப் பவ்வியமாக அழைத்தார்.

"டேய்... செல்லையா...! நான் நிண்ட இடத்திலை நிண்டுதான் சண்டித்தனம் விடுவன், நர்றாசாவைத் தேடிப்போய் அடிக்க அவனென்ன பெரிய கவுணரே...? ஆளைக் கொண்டா குடலை எடுக்கிறன்" — சண்டிக்கட்டை இழுத்துக் கட்டினான் பொன்னுத்துரை,

"இதென்ன வம்பு. இவனுக்குக் கூடிப்போச்சுப்போலை கிடக்கு, என்னோடையே டேய் புடேய் எண்டு கதைக்கிறான்...' என்று நினைத்தவர், "அவன் என்னோடை கதைக்கிறேல்லை விடியவும் கொழுவுப்பட்டனாங்கள் நான் கூப்பிட்டா வரான்... நீங்கள் என்னோடை வந்தியளெண்டா ஆளை இப்ப காட்டித் தருவன்"— செல்லையா பரிதாபமாக இப்படிக் கூறினார்.

"டேய்... செல்லையா! போய் கூட்டியா எண்டா வீண்கதை கதைச்சுக்கொண்டு நிக்கிறாய்... போவெண்டாப் போவன்ரா..." செல்லையாவின் நெஞ்சைப் பிடித்துத்தள்ளினான் பொன்னுத்துரை. செல்லையர் அலமலக்க விறகு கும்பியில் விழுந்தெழும்பி ".இது சரியில்லை... என்னட்டை சாராயம் வாங்கிக் குடிச்சிட்டு எனக்கே அடிக்க வாறியள்" கொஞ்சம் ரோசம் பிறந்துவிட்டது செல்லையருக்கு.

"என்னடா... வேண்டிக் குடிச்ச கதை கதைக்கிறாய்?" பொன்னுத்துரையின் கையில் இருந்த வெறும் போத்தல் மளமளவென செல்லையாவின் உடம்பைப் பதம் பார்த்தது. "என்னரை ஐயோ...!" செல்லையா அடி தாங்காமல் மீண்டும் விறகு கும்பியில் விழுந்துருண்டார்.

"எடேய்... வாறவனெல்லாம் வா, இந்தப் போத்திலடி பொன்னுத்துரைக்கு ஒருத்தரும் சண்டித்தனம் விடேலாது... விளங்குதோ...?" நிலத்தில் விழுந்து கை ஊண்டி எழும்ப எத்தனித்த செல்லையாவிக்கு மீண்டும் காலாலும் கையாலும் விளாசித் தள்ளினான்.

சத்தம் கேட்டு வீதியில் போய்வந்தோரெல்லாம் எட்டிப் பார்த்தார்கள். கடைக்காரர் சின்னப்பு விறகு கொட்டிலுக்கு ஓடிவந்து பார்த்தார். பொன்னுத்துரை தூஷண வார்த்தைகளுடன் சன்னதம் ஆடிக்கொண்டு நின்றான்.

"ஐயோ கடவுளே... இவன்ரை குணம் தெரியாமல் இவங்கள் தலைதெறிக்க சாராயம் வாங்கிக் குடுத்திட்டாங்கள். இனி என்ரை கடைக்குள்ளை பூந்து போத்திலெல்லாம் உடைக்கப்போறான்" என்று அங்கலாய்த்தபடி சின்னப்பு கடைப் பலகையை மாட்டி கடையைப் பூட்டிக்கொண்டிருந்தார்..

கீழே விழுந்த நட்டர் செல்லையா நாரியைப் பிடித்தபடி எழுந்தார். "ஐயோ... படினம் நர்றாசாவுக்கு அடிக்கச்சொல்லி சாராயம் வாங்கிக்குடுக்க இந்தத் தெறிப்பான் முழுச் சாராயத்தையும் குடிச்சுப்போட்டு எனக்கே அடிச்சுப்போட்டான்."

செல்லையா நாரியைப் பிடித்தபடி, வீதியில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த ரசிகர்களுக்கு இப்படி ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தார்,

பொன்னுத்துரைக்கு சாராயம் காதை அடைத்திருக்கவேண்டும். செல்லையாவின் ஒப்பாரி கேட்கவில்லை. இப்போது பொன்னுத்துரை போத்திலுடன் வீதியில் ஏறினான், நடுரேட்டில் போத்திலை எறிந்து உடைத்தான். வேடிக்கை பார்த்த ரசிகர்கள் ஈக்கில் வாணம் புறப்பட்டதைப் போல திக்குத் திக்காக ஓடினார்கள்.

"எந்த இஞ்சுப்பற்றர் பொலிசுவுக்கும் இந்த போத்திலடி பொன்னுத்துரை, பயப்பிடமாட்டான்... வாறவனெல்லாம் வா" சேட்டைக் கழற்றி எறிந்து சண்டிக் கட்டுடன் நடுச்சந்தியில் பைலா ஆடிக்கொண்டு நின்றான் போத்திலடி பொன்னுத்துரை.

★

ஆசிரியர்: பின் வரிசையில் இருப்பவர்கள் தயவு செய்து "நோட்ஸ்" பரிமாறுவதை நிற்பாட்டுங்கள்,

பின் வரிசையினர்: நாங்கள் நோட்ஸ் பரிமாறவில்லை. "கார்ட்ஸ்" விளையாடுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒய்யப்பங்கங்காணியார். —குறிஞ்சிதாசன்

"டேய் கோமுட்டி, அந்தக் காலத்துல கோயில்னு சொன்னு அது தெய்வம் குடியிருக கோயில்தாண்டா... இப்ப இந்த கலிகாலத்துல இன்னுடான்னு கோயில் ஒரு 'லேடீஸ் கிளப்' மாதிரிக்கும் 'பொப்இசை' யினு சொல்லி கூத்தடிக்கிருகளே அந்த மேடை மாதிரிக்குமே இருக்கையா..."



நா சொல்றேங்குறதுனுல நீங்க ஏத்துக்கவேண்டாம். நீங்களா யோசிச்சி பாருங்கங்றேன். கோயிலுங்குறது எதுக்கு இருக்கு? மனசார சாமிய வேண்டிக்கிறதுக்குத்தானே? ஆனு இங்க இன்னுய்யா நடக்குது? தூத்தேரிக்க! டேய் கோமுட்டி, இளிச்சி கொட்டாதடா முண்டம்! நானு சொல்றத நல்லா மூளைக்கு எடுத்து பாருடா.

போன வெள்ளிக்கெழம காலங்காத்தாலே எழும்பி, குளிச்சி, முழுவி வெரதம் இருந்து மச்சம் மாமிசம் எதையுமே வாயில வக்காம துப்புரவா இருந்து அந்திக்கு கோயிலுக்கு போனேய்யா. கோயில்னு ரொம்ப விசேசமா இருந்திச்சையா. நானு 'அப்பனே முருவா' ன்னு வேண்டிக்கினே கோயிலுக்குள்ள போனேய்யா. யெங்கொப்புருனே, கோயிலுக்குள்ள இருக்க சனங்கள பாத்த பிருப்பாடு எனக்கு அடிவயத்துல என்னுமோ செஞ்சிருச்சையா. ஒரு கழுத கோட கோயிலிக்கு சாமி கும்புட வந்தமாதிரிக்கு எனக்குன்னு தெரியல்லையா. எங்க தோடத்து தொரையும் தொரசாணியும் கிளப்புக்கு உடுத்துகினு போவாகளே, அதுமாதுரிதாய்யா எல்லாரும் உடுத்துக்கினு வந்திருந்தாங்க. இதுல பாருங்கையா இந்த பொம்மனுட்டிக இருக்காகளே, அதுக ரொம்ப மோசம். அதுலயும் செல 'நாம்பல் சைஸ்சு' குட்டிக மினிஸ்கேட் போட்டுகினு வந்திருக்குதூக. இந்த லெச்சனத்துல இதுக கீழ குணிஞ்சி வேற கும்பிடுதூக. அப்புடி கும்புடக்கொல பின்னுக்கிருக்க பயலுவலுக்கு நல்ல 'சோ' தான். அவனவேன் வேருக்க, விருவிருக்க அதையே பாத்துக்கினு பெறம புடிச்சவன் மாதிரிக்கே விக்கி போயி நிக்கிறானுக ஐயா. இந்த வயத்தெரிச்சல எங்கையா போயி மெறயிடுறது? செல பொம்மனுட்டிக ரெஸ்பேட்டா சேல கட்டிக்கினு வந்திருந்தாக. ஆனு என்ட மனுஷி பருவதாச்சி எல்லாம் சேலய இடுப்புலதானு கட்டுவாக. ஆனு இந்த பொம்பலக அடிவயுத்துல கட்டிக்கினு நிக்குதையா. சுண்ணும்பு டப்பி மாதிரிக்கே தொப்புல் தெரிய ஜிவ ஜிவுன்னு வயுத்து சதையெல்லாம் தொங்க சிங்கப்பூர் நைலெக்ஸ்சு சேலகல கட்டிக்கினு நிக்குதுக ஐயா. 'முருவா'ன்னு அதுக கைகல தூக்கிகும்புடக்கொல சேல நழுவி அப்புடியே கீழ உழுந்துருமோன்னு எனக்கு நெஞ்சி 'படக் படக்' குனு அடிச்சிக்கினு இருந்திச்சையா! ஒவ்வொருத்தியூட்டு கொண்டையும் ஒவ்வொருதினுசு தாய்யா. கோயில் கலசம் மாதிரிக்கே ஒண்ணு. குதுறவால் கணக்கா ஒன்னு, பாஞ்சாலி சபதம் போடக்கொல கூந்தல் விரிச்சி போட்டாளே, அதுமாதிரிக்கே ஒன்னு. அடேயெங்கப்பா— சகிக்கமுடியல்ல. செல நோனுமாருங்க வெத்தல, பாக்கு, பயம், ஊதுபத்தி இதுகல 'சேமிஸ்பொண்டு' சூஸ்கேசுல போட்டுக்கினு வருகு




"இலக்கியத்தில் நாம் காணும் அன்னம் இன்று இல்லையென்று கவலைப்பட்டுக்கொண்டிருந்தேன்...... ஆனல் அந்தக் குறையை மில்க்வைற் சோப் போக்கி விட்டது. மில்க்வைற் சோப்பினுல் சலவை செய்த ஆடைகள் அணிந்தவர்கள் எல்லோரும் என் கண்களுக்கு அழகாக அன்னம்போல காட்சி தருகின்றனர்"

மில்க்வைற் சோப்

தொழிற்சாலை

காங்கேசன்துறை வீதி — யாழ்ப்பாணம்

கிளை: 79, மெசஞ்சர் வீதி, கொழும்பு - 11




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக. கோயில்ல வச்சி அத தொறந்து எல்லாத்தையும் தாம்பாலத்துல வச்சு அர்ச்சனைக்கு குடுக்குதாக' இந்த கூத்த யாருகிட்ட சொல்ல முடியூம்கிறேன்?

பொம்மனுட்டிகதான் இந்த ரோதன எல்லாம் செய்யுதுகன்னு இந்த எலந்தாரி பயலுவட கொட்டமும் தாங்க முடியல்லையா. கொமரி குட்டிக படக்கு படக்குன்னு அங்கிட்டும் இங்கிட்டும் போகேக்கொல இந்த நெருப்புக் குச்சிகவூட்டு கொல்லி கண்ணுக படுற பாட்ட பாத்தா பரிதாபமா இருக்கையா. முழிய உருட்டி உருட்டு அவளுகள இவனுக பாக்குறத பாத்தா, தூத்தேரிக்க... கண்ணாருவி! இதுல பெல்லு

லோவத்துல இருந்துவந்து வாசிக்கிற மாதிரிக்கே இருக்கும். அந்த நாயனம்னு நாயனம்தாய்யா. யேய்யா அவுருக்கு பொறவுகூட காருக்குறிச்சி அருணாசலம்பிள்ளைசனுப் சின்னமௌலானு, சேதுராமன் அண்ணன் தம்பிக இப்புடி நாதசுரத்தை தெய்வ இசையாக்குனவுக இருக்கக்கொல நம்ம கோயிலு நட்டுவபய கோயில்ல வச்சி இன்னு வாசிக்கறான் தெரியுமா ஐயா? நம்ம பேரன் செலம்பரம் முந்தியெல்லாம் சரோசாவ நெனச்சி படிப்பானே... பாட்டு

"நீ என்ன என்ன சொன்னாலும்
கவித — நீ
நீ எங்குட்டு எங்குட்டு தொட்
டாலும் இனிம..."



திருடன்: எங்கே போய் விட்டு வருகிறாய்?

வங்கிக்கு.

வங்கிக்குப்போட்டு வருகிறாயா? ம்... எடு பணத்தையும் நகைகளையும்?

ஐயோ! நான் ரத்த வங்கிக்கல்லவா போய்விட்டு வருகிறேன் ரத்ததானம் செய்துவிட்டு!

ச. ரா. பா.

பொட்டம்னு பாவட மாதிரிக்கே ஒரு டோங்ஸ்ச போட்டுக்கினு குதுர பொரடி மயிரு மாதிரிக்கே முடிய வழத்துக்கினு இவனுகள்ளாஃ யேய்யா கோயிலுக்கு வாராணுக?

கோயிலுக்கு வர்ரவுக கூட்டம்தான் இந்த லெச்சனம்னு அங்கயே இருக்கவுக வூட்டு கூத்து அகவுட பெருசா இருக்கு. 'பீப் பீபீ'ன்னு நாதசுரம் ஊதுறானே அந்த நட்டுவபய- அவன்ட கூத்து சொல்லமுடியல்லய்யா. அந்த காலத்துல்ல நாங்கல்லாம் சின்ன பயலுகலா இருக்கக்கொல ஒரு கோயில்லயோ, திருவுழாவுலயோ நாதசுர சக்குறவத்தி ராசரத்துனம்பிள்ளை மவராசன் நாதசுரம் வாசிச்சாருன்னு சாட் சாட் அந்த கிருஷ்ணபரமாத்மாவே சொக்க

"செவ்வாழ காலெடுத்து வா...
வா... வா...
செம்மாதுள பொழந்து தா...
தா... தா...

இப்புடி கச்சடா பாட்டெல்லா நாதசுரத்துல வாசிக்கிறாய்யா கோயில்ல குட்டிகளும் பயலுவலும் ஒத்தர்ல ஒத்தர் மயங்கிகினு இருக்கக்கொல அவுகளுக்கு இன்னமும் "சூண்" ஏத்துரசுணக்கா இல்ல நாயனம் வாசிக்கிறானுக. எந்த கோயில்ல போயி இந்த எலவ சொல்லி முட்டிக்கிறது?

"டேய் கோமுட்டி, அந்தக் காலத்துல கோயில்னு சொன்னா அது தெய்வம் குடியிருக்க கோயில் தாண்டா. இப்ப இந்த கலிகாலத்துல இன்னுடான்னு கோயில் ஒரு 'லேடீஸ் கிளப்' மாதிரிக்கும் 'பொப் இசை' யினு சொல்லிக்கினு கூத்தடிக்கிறாகளே அந்த மேடை மாதிரிக்குமே இருக்கையா!

## கலையுலக நினைவுகள்!

இற்றைக்கு ஏறத்தாழ இருபது வருடங்களுக்கு முன்பு கோவில் திருவிழாக்களில் நடைபெற்ற கொட்டகைக்கூத்துகளுக்கு கவர்ச்சி இருந்தது.

அப்போதெல்லாம் சின்னையா தேசிகர் நாடகங்களில் நடிக்கிறார் என்றால் ஒருதனிக் கவர்ச்சியிருந்தது. சின்னையா தேசிகர் இணுவிலைச் சேர்ந்தவர். அவரது பாட்டு, பேச்சு யாவும் இன்று செவிகளில் ரீங்காரம் செய்கின்றன.

'கண்ணகி' படத்தில் பி. யூ. சின்னப்பா பாடிய 'மானம் எல்லாம் போன பின்னே' என்ற புகழ்பெற்ற சாமாஇராகப் பாட்டை சின்னையா தேசிகர் 'கோவலன்' நாடகத்தில் சோக உணர்வு ததும்பப் பாடியதை என்றுமே மறக்கமுடியாது. அந்த அற்புதக் கலைஞன் இளமையிலேயே மறைந்துவிட்டார்.

'மானம் எல்லாம்' என்ற இதே பாட்டை நினைவூட்டுவதுபோல நாதஸ்வர வித்துவான், வேதாரணியம் வேதமூர்த்தி மிருதங்கத்துடன் வாசித்துள்ள ஒரு கீர்த்தனை சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி பொழிந்தாற்போல் இருக்கிறது என்று இலகுவாகச் சொல்லிவிட்டு இருக்க முடியாது.

இசையினைக் கேட்டுக் கேட்டு அதிலே மூழ்கித் திளைக்கவேண்டும். வார்த்தைகளில் அதனை விளக்கமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டன் லட்டு

எங்க கட்சி அங்கத்தவராக வேண்டுமானால் மேடைப்பேச்சில் வல்லவனாயிருக்கவேண்டும்.

என்னில் நிறையக் கேள்வி ஞானமுண்டு... பேசுவதற்கு மனைவி சான்ஸ் தந்தால்தானே!

□

காதலன் காதலியிடம்; உன் கன்னத்தில் முத்தமிட்டால் உலகமே சுற்றுவதுபோய் இருக்கிறது

மறைவிலிருந்த பெண்ணின் தந்தை: நானும் கன்னத்தில் ஒரு குத்து விட்டால் உலகம் சுற்றுவது போல் தெரியும்!

□

காதலன்: உனக்காக நான் நெருப்பையும் தண்ணீரையும் கடக்கச் சித்தமாயிருக்கிறேன்.

காதலி: அவ்வளவு தூரம் போகவேண்டாம்... அடுக்களைக்குள் போய் நெருப்பில் தண்ணியைச் சுடவைத்து ஒரு டீ போட்டு வாங்க.

□

ஒரு மறதிக்காரத் தத்துவ மேதையை பத்திரிகை நிருபர் ''நீங்கள் வாழ்க்கையில் எதைத் தேடிக்கொண்டிருக்கிறீர்கள் எனக் கேட்டார்.

அதற்கு அவர் ''நான் என் மூக்குக் கண்ணாடியைத் தேடிக் கொண்டிருக்கிறேன்" எனப் பதிலளித்தார்.

□

மெலிந்துபோனாயே! ஆஸ்பத்திரியில் படுத்திருந்தியா?

இல்லை... வீட்டில் மனைவி மெலிவதற்கு மருந்து சாப்பிடுகிறாள்!

மிஸ்ஸிஸ் ஜோனின் நாயை கார் நெரித்துவிட்டது. இச்செய்தியைக் கேள்விப்பட்டால் ஏக்கத்தில் இறந்துவிடுவாள்.

இதைத் திடீரென்று சொல்லக்கூடாது,

இல்லை, முதல் ''கணவன் விபத்தில்" என்றுதான் கதையை ஆரம்பிப்பேன்.

□

உனக்குக் கல்யாணமாகிவிட்டது... ஒரு இன்சூரன்ஸ்பொலிஸி எடுத்தால் நல்லது.

- ஏன்? என் மனைவி பொல்லாதவளா!

□

கணவன்: லோண்டரிக்காரன் சட்டையை மாற்றித் தந்துவிட்டான்... சட்டை இறுக்கமாயிருக்கு... சுவாசிக்கமுடியவில்லையே.

மனைவி: அது உங்களுடைய ஷேர்ட்தான்... பொத்தான் ஓட்டைக்குள்ளால் தலையை விட்டிட்டீர்களே!

□

மகள்: நான் ஒரு பொலிஸ்காரனைத் திருமணம் செய்யப் போகிறேன்.

தந்தை; அவரின் பெயர் என்ன?

மகள்: பெயர் தெரியாது... நம்பர் தெரியும்.

தந்தை: எண்கணித சாஸ்திரத்தின்படி அதிஷ்ட எண்ணாக இருந்தால் திருமணம் செய்வதற்குச் சம்மதம் தருவேன்!

— சிந்தனா

## கல்யாண லட்டு.

ஒலிபெருக்கியில் சினிமாப் பாட்டு கதறுது... எங்கோ கலியாண வீடு போல.

நம்ம மகனின் கல்யாணம்... எனக்குத் தெரியாமல் கல்யாணம் பண்ணிறான்.

□

யார் உனக்குப் பக்கத்தில் மணவறையில் இருக்கப்போகும் அதிஷ்டசாலி'

எங்க வீட்டு முன்னறையில் இருந்த அவர்.

— அதிமதுரம்

□

உங்க பெல்பொட்டம் மகளை வீட்டில் காணவில்லையே?

அறைக்குள் தாவணி போட்டுப் பழகுகிறாள்... ஆவணியில் கல்யாணம்!



மாப்பிளை பகுதியும் பொம்பிளை பகுதியும் ஊரெல்லாம் சொல்லிக் கல்யாணம் செய்கிறார்கள்... எனக்கு மட்டும் சொல்லவில்லை!

நீர் அவர்களின் சொந்தமா?

காதல் கடிதங்கள் கொண்டு திரிந்தவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SPACE DONATED BY:

# SOTHY TEXTILES

14, MODEL MARKET,

**JAFFNA!**

Phone: 7562

BRANCH:

# LINGAM SILK HOUSE

18, MODEL MARKET, JAFFNA.

யா. இடைக்காடு மகாவித்தியாலயம்

## பொன்விழாவும் ப. மா. சங்க வெள்ளிவிழாவும் — 1976

## 28-8-76 முதல் 2-9-76 வரை

- மாணவர் பொருட்காட்சி (புதிய கல்வித் திட்டத்திற்கமைய)
- விவசாய ஊர்திகள் பவனி
- களியாட்ட கலை நிகழ்ச்சிகள்
- நூலகக் கண்காட்சி
- பல்வகை விற்பனைக் காட்சி முறைகள்
- விஞ்ஞான அறிவியல் விவசாய காட்சிகள்

அத்துடன்

- மெரிகோரவுண்ட்
- மாயா ஜாலம்
- கராட்டி, மல்யுத்தம்
- பாலர் நடனம்
- நாடகம்

எங்களின் சுவை நிகழ்ச்சிகள் அனைத்தும் காணத் தயாராகுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதம தபாற்கந்தோரில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பெற்றது. பதிவு இலக்கம் கியூ. பீ. 59/300





உங்கள் தையல் வேலைகளுக்குத் தரமான நூல்கள்

"முயல் மார்க்" நூல்களே

பல வர்ணங்களில்
எங்கும் பெற்றுக்கொள்ளலாம்.

தயாரிப்பாளர்கள்:

சம்பியன் திரெட் மனுபக்சரிங் கம்பெனி,.

கொழும்பு — 12.


122, நாவலர் வீதி சி. சிவஞானசுந்தரம் அவர்களால், 122, நாவலர் வீதியிலுள்ள கவின் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org